
பக்கங்கள் 18 + 06

மாலை முரசு
கனடா முரசு இணைப்பு

முழக்கம்: 01 வள்ளுவ ஆண்டு 2055 ஆனி 11 திங்கட்கிழமை 24.06.2024 அதிர்வு 328

## ஜனாதிபதி புதனன்று விசேட உரை



ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நாளைமறுதினம் புதன்கிழமை (26 ஆம் திகதி) நாட்டு மக்களுக்கு 04



# கல்முனையில் இன்று வெகுண்டெழுந்த தமிழர்

## 6 மணித்தியாலங்களாகப் போராட்டக்காரர் வசமான நகரம்

(பாறுக் ஷிஹான், வி.ரி. சகாதேவராஜா)

கல்முனை வடக்கு பிரதேச செயலக விடயங்களுக்கு உடனடித் தீர்வைப் பெற்றுத்தருமாறு கோரி இன்று தமிழ் மக்களால் பாரிய ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டமையால் மட்டக்களப்பு - கல்முனை பிரதான வீதியின் போக்குவரத்துக்கு இடையூறு ஏற்பட்டதுடன் பதற்ற நிலையும் தொடர்ந்தது.

அத்துடன் பிரதேச செயலகத்தின் நுழைவாயிலையும் 02



# மொட்டும் யானையும் தனிவழியில் சென்றால் இரண்டு தரப்புகளுக்கும் பின்னடைவு ஏற்படும்

## இப்படி எச்சரிக்கின்றார் திஸாநாயக்க எம்.பி.

“மஹிந்த ராஜபக்ஷ தலைமையிலான ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சியும், ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான ஐக்கிய தேசியக் கட்சியும் இணைந்து பயணிக்காவிட்டால் ஜனாதிபதித் தேர்தலில் இரு கட்சிகளுக்கும் பின்னடைவு ஏற்படக்கூடும்.”

– இவ்வாறு ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.பி. திஸாநாயக்க தெரிவித்தார்.

இது தொடர்பில் ஊடகங்க 04














## கல்முனையில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பூட்டிய நிலையில் அதிகாரிகளை உள் நுழைய விடாமல் பொதுமக்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டிருந்தனர்.

கல்முனை வடக்கு பிரதேச செயலகத்துக்கு எதிராக இடம்பெறும் நிர்வாக அடக்குமுறைகளை கண்டித்தும் அதற்கான உரிய தீர்வு கோரியும் தொடர்ச்சியாக 92 நாட்களாகப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டு வருகின்ற நிலையில் இன்று பாரிய ஆர்ப்பாட்டம் இடம்பெற்றது.

இந்த ஆர்ப்பாட்டம் காரணமாக மட்டக்களப்பு – கல்முனை வீதி தடைப்பட்டதால் வாகனங்களை மாற்று வீதிகளில் பொலிஸார் அனுப்பினர்.

இதேவேளை, 6 மணித்தியாலங்களாகக் கல்முனை நகர் போராட்டக்காரர் வசம் இருந்த நிலையில் கல்முனையில் வீதி மறியல் போராட்டம் தற்காலிகமாக நிறுத்தப்பட்டு மாவட்ட அரச அதிபர் மற்றும் சிவில் சமூக செயற்பாட்டாளர்களிடையே கலந்துரையாடலுக்கு ஏற்பாடு செய்யப்பட்டது.

முற்பகல் 8 மணிமுதல் பிற்பகல் 2 மணி வரை கல்முனை மாநகரம் ஸ்தம்பித்திருந்ததுடன் நகரில் இருந்து அனைத்து பொதுப் போக்குவரத்துக்களும் தடைப்பட்டிருந்தன. மருத்துவ சேவை வாகனங்கள் மாத்திரம் ஆர்ப்பாட்டக்காரர்களால் அனுமதிக்கப்பட்டிருந்தன.

அத்துடன் தமது நியாயமான கோரிக்கைக்குப் பதில் என்ன? எனப் பல கோஷத்துடன் வீதியில் அமர்ந்தும் அவர்கள் போராட்டம் செய்தனர். பின்னர் மாவட்ட அரச அதிபர் பொலிஸாரின் மத்தியஸ்த்துடன் போராட்டத்தில் ஈடுபட்ட மக்களுடன் கேட்டுக்கொண்டதற்கிணங்க சிவில் சமூகச் செயற்பாட்டாளர்கள் 8 பேர் மாவட்ட செயலகத்துக்குப் பேச்சு வார்த்தைக்குச் சென்றனர். அதுவரை வீதி மறியல் போராட்டம் தற்காலிகமாக நிறுத்தப்பட்டது. மேலும் வழமை போன்று கல்முனை வடக்கு பிரதேச செயலகம் முன்பாக சுழச்சி முறை போராட்டம் தொடர்கின்றமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, வழமைக்கு மாறாக இன்று பாரிய விமானம் ஒன்று பெரும் இரைச்சலுடன் கல்முனை நகருக்கு மேலே வட்டமடித்த வண்ணம் இருந்ததையும் காண முடிந்தது.



# குருந்தூர்மலை, வெடுக்குநாறிமலை ஆலயங்களில் சைவ மக்கள் சுதந்திரமாக வழிபாடுகள் செய்யலாம்

## இந்து அமைப்புக்களின் தலைவர்களிடம் அமைச்சர் விதுர தெரிவிப்பு

(எஸ்.நிதர்ஷன்)

குருந்தூர்மலை மற்றும் வெடுக்குநாறிமலை சிவன் ஆலயங்களில் சைவ மக்கள் சுதந்திரமாக வழிபாடுகள் செய்யலாம் என்று புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் விதுர விக்கிரமநாயக்க, இந்து அமைப்புக்களின் தலைவர்களிடம் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்த அமைச்சர் விதுர விக்கிரமநாயக்க, இந்து மதத் தலைவர்களைச் சந்தித்துக் கலந்துரையாடியுள்ளார்.

நல்லை ஆதீன குரு முதல்வர் தலைமையில் நல்லை ஆதீனத்தில் நேற்று இடம்பெற்ற இந்தச் சந்திப்பில் இந்து மக்கள் எதிர்நோக்கும் பல்வேறு பிரச்சினைகள் தொடர்பாகக் கலந்துரையாடப்பட்டன என்று சிவபூமி அறக்கட்டளை அமைப்பாளர் கலாநிதி ஆறு. திருமுருகன் தெரிவித்தார்.

இந்தச் சந்திப்பு தொடர்பில் அவர் மேலும் கூறியதாவது:-

"குருந்தூர்மலை மற்றும் வெடுக்குநாறிமலை சிவன் ஆலயங்களில் சைவ மக்கள் சுதந்திரமாக வழிபாடு செய்ய ஏற்பாடு செய்ய வேண்டும் என அமைச்சரிடம் வேண்டுகோள் விடப்பட்டது.

மேலும், திருக்கோணேஸ்வரம் ஆலயம் அருகே உள்ள பாதையின் இருமருங்கிலும் அமைக்கப்பட்டு இருக்கின்ற பெட்டிக் கடைகளை அப்புறப்படுத்தி புனிதத் தலத்தின் மேன்மையைப் பேண வழி செய்ய வேண்டும் என்றும் அவரிடம் எடுத்துரைக்கப்பட்டது.

யாழ். காங்கேசன்துறை - தல்செவன ஹோட்டல் அமைந்துள்ள இடம் சைவ மக்களின் ஆச்சிரமம் இருந்த இடம் எனவும், அது இதுவரை விடுவிக்கப்படவில்லை எனவும் சுட்டிக்காட்டியதுடன் அதனை உடன் வழங்க ஏற்பாடு செய்யுமாறும் அமைச்சரிடம் கோரிக்கை விடப்பட்டது.

இவ்வாறு நாம் விடுத்த கோரிக்கைகளுக்குப் பதில் கூறிய அமைச்சர், குருந்தூர்மலை, வெடுக்குநாறிமலைப் பகுதிகளில் சைவ மக்கள் உள்ளிட்ட சகல மதத்தவர்களும் சுதந்திரமாக வழிபாடு செய்யலாம் என்றும், அந்தப் பகுதிகள் தொல்லியல் திணைகளத்தின் கட்டுப்பாட்டில் உள்ளன என்றும் தெரிவித்தார். மேலும், திருக்கோணேஸ்வர ஆலய வீதியில் பெட்டிக்கடை அகற்றுவது தொடர்பாக மாற்று ஏற்பாடு விரைவில் செய்யப்படும் என்றும் அவர் உறுதியளித்தார்.

காங்கேசன்துறை தல்செவன ஹோட்டல் காணி விடயம் தொடர்பில் நடவடிக்கை எடுப்பதாகவும் அமைச்சர் கூறினார்." - என்றார்.

இந்தச் சந்திப்பில் நல்லை ஆதீன குரு முதல்வர் சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள், ரிஷி தொண்டுநாதன் சுவாமிகள், இந்து கலாசார திணைக்களத்தின் பணிப்பாளர் அநுருத்தன், சிவபூமி அறக்கட்டளை அமைப்பாளர் கலாநிதி ஆறு. திருமுருகன் ஆகியோர் கலந்துகொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# O/L பரீட்சை பெறுபேறு 10 நாட்களுக்குள்!

2023 (2024) ஆம் ஆண்டுக்கான ஜி.சீ.ஈ. சாதாரண தரப் பரீட்சையின் பெறுபேறுகள் எதிர்வரும் 10 நாட்களுக்குள் வெளியிடப்படும் என்று பரீட்சைகள் திணைக்களம் அறிவித்துள்ளது.




இந்த வாரத்துக்குள் பெறுபேறுகளை வெளியிட நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது என்றும், அவ்வாறு இல்லையெனில் 10 நாட்களுக்குள் பெறுபேறுகள் வெளியிடப்படும் என்றும் பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் அமித் ஜயசுந்தர தெரிவித்துள்ளார்.

சாதாரண தரப் பரீட்சை கடந்த மார்ச் மாதம் நடைபெற்றது. அதில் 4 இலட்சத்து 52 ஆயிரத்து 979 பரீட்சார்த்திகள் பரீட்சைக்குத் தோற்றினர். அவர்களில் 3 இலட்சத்து 87 ஆயிரத்து 648 பேர் பாடசாலை பரீட்சார்த்திகளாவர். 65 ஆயிரத்து 331 பேர் தனியார் விண்ணப்பதாரர்களாவர்.



# நாளாந்த சம்பளம் ரூ. 1700 வேண்டும்

## பசறையில் தொழிலாளர்கள் போராட்டம்

(ராமு தனராஜா)

தோட்டத் தொழிலாளர்களுக்கு நாளாந்த சம்பளமாக 1,700 ரூபாவை வழங்குமாறு வலியுறுத்தி பசறை எல்ப் கிகிரிவத்தை தோட்டத் தொழிலாளர்கள் இன்று அமைதி வழிப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இன்று காலை 9. 30 மணியளவில் எல்ப் கிகிரிவத்தை தோட்டக் காரியாலயத்துக்கு முன்பாக இந்த அமைதி வழிப் போராட்டம் இடம்பெற்றது.

அரசால் வெளியிடப்பட்ட வர்த்த மானிக்கமைய தங்களுக்கு உடனடியாக 1,700 ரூபா சம்பளத்தை வழங்குமாறு போராட்டத்தில் ஈடுபட்ட தோட்டத் தொழிலாளர்கள் வேண்டுகோள் விடுத் தனர்.

இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் உப தலைவர் அசோக் குமார் தலைமையில் இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் மாநில இயக்குநர் கனகராஜ் மற்றும் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் காரியாலய உத்தியோகத்தர்கள் ஆகியோரும் போராட்டம் இடம்பெற்ற இடத்துக்கு வருகை தந்ததோடு தோட்ட உயர் அதிகாரியுடன் பேச்சுவார்த்தையிலும் ஈடுபட்டனர்.

# யாழில் காய்ச்சலுக்கு மருந்தெடுத்த 63 வயது பெண்மணி வீட்டில் மரணம்

## உடற்கூற்று மாதிரிகள் கொழும்புக்கு

காய்ச்சலுக்கு மருந்து எடுத்து மருந்தை உட்கொண்ட பெண்மணி உயிரிழந்துள்ளார். யாழ்ப்பாணம், சாவற்காட்டு பகுதி யைச் சேர்ந்த 63 வயதுடைய விஜய குமார் குணராணி என்றே பெண்ணே உயிரிழந்துள்ளார்

மேற்படி பெண்ணுக்குக் கடந்த 20ஆம் திகதி திடீரென காய்ச்சல் ஏற்பட்டுள்ளது. அதற்காக 22ஆம் திகதி யாழ். போதனா வைத்தியசாலைக்குச் சென்று சிகிச்சை பெற்று, மருந்தைப் பெற்றுக்கொண்டு வீடு திரும்பியுள்ளார்.

மருந்தை உட்கொண்ட பின்னர், மறுநாள் 23ஆம் திகதியான நேற்றைய தினம் உடல் நிலை மிக மோசமாகி மூச்சுவிட சிரமப்பட்ட நிலையில், யாழ். போதனா வைத்தியசாலைக்கு அழைத்துச் செல்லப்படுவதற்கு முன்னர் வீட்டில் அவர் உயிரிழந்துள்ளார்.

யாழ். போதனா வைத்தியசாலையில் உடற்கூற்றுப் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டு மேலதிக பரிசோதனை நடவடிக்கைக்காக மாதிரிகள் கொழும்புக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

## முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

### ஜனாதிபதி...

விசேட உரையாற்றவுள்ளார்.

இந்தத் தகவலை ஐக்கிய தேசியக் கட்சியின் தேசிய செயலாளரும் முன்னாள் அமைச்சருமான ரவி கருணாநாயக்க தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறிய தாவது:-

“எதிர்வரும் 26 ஆம் திகதி நாட்டு மக்களுக்கு மகிழ்ச்சியான செய்தி கிட்டவுள்ளது. பாரிஸ் கிளப், இந்தியா மற்றும் சீனா உட்பட இலங்கைக்குக் கடன் செலுத்துநர்களிடமிருந்து நல்ல செய்தி வரும். இது சம்பந்தமாக 26 ஆம் திகதி மாலை ஜனாதிபதி நாட்டு மக்களுக்கு உரையாற்றவுள்ளார். நாடு வங்குரோத்து நிலையிலிருந்து மீளவுள்ளது. எனவே, நிதி ஒதுக்கத்துடன், சிறந்த திட்டங்களுடன் பொருளாதாரத்தை முன் னோக்கிக் கொண்டு செல்ல வேண்டியுள்ளது.” – என்றார்.

### மொட்டும்...

ளிடம் அவர் மேலும் கூறியதாவது:-

“ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சியின் ஆசியுடன் களமிறங்கினால் ஜனாதிபதித் தேர்தலில் ரணில் விக்கிரமசிங்க வெற்றி பெறுவார்.அவ்வாறு இல்லாவிட்டால் தோல்வியே ஏற்படும்.

ரணிலைப் பிரதமர் மற்றும் ஜனாதிபதிப் பதவிக்கு மொட்டுக் கட்சியே கொண்டுவந்தது. எனினும், மொட்டுக் கட்சி எதிர்பார்த்த அரசொன்று அமையவில்லை. எனவே, இரு தரப்புக்கும் இடையில் உள்ள முரண்பாடுகள் பேச்சு மூலம் தீர்க்கப்பட வேண்டும்.

பிரச்சினைகளைத் தீர்த்துக்கொண்டு இணைந்து பயணித்தால் ரணிலுக்கு வெற்றி நிச்சயம். மொட்டுக் கட்சியும் ஐக்கிய தேசியக் கட்சியும் தனிவழியில் சென்றால் இரு தரப்புகளுக்கும் பின்னடைவு ஏற்படும்.” – என்றார்.

# போதைப் பொருள்களுக்கு அடிமையாகும்போது ஆளுமையற்ற மனிதர்களாக அது மாற்றிவிடும்!

## பூநகரிப் பிரதேச மேற்பார்வை பொது சுகாதார பரிசோதகர் ஜென்சன் றொனால்ட் கருத்து

(த.சுபேசன்)

போதைப்பொருள்களுக்கு அடிமையாகும் போது, அது எமது மூளையை ஏமாற்றி தலைமைத்துவம் இழக்கப்படும். வாழ்க்கைத் திறன்களைச் சிதைத்து, ஆளுமையற்ற மனிதர்களாக எம்மை மாற்றிவிடுகிறது.

பூநகரிப் பிரதேச மேற்பார்வை பொதுச் சுகாதார பரிசோதகர் ஜென்சன் றொனால்ட் தெரிவித்துள்ளார்.

அண்மையில் முழங்காவில் மகா வித்தியாலயம் மற்றும் ஜெயபுரம் மகா வித்தியாலய மாணவர்கள் மத்தியில் முன்னெடுக்கப்பட்ட போதைப் பொருள் தடுப்புத் தொடர்பான செயலமர்வில் வளவாளராக கலந்து கொண்டு கருத்துரைத்த போதே அவர் இவ்வாறு தெரிவித்திருந்தார். இது தொடர்பாக மேலும் அவர் கருத்துத் தெரிவிக்கையில்,

மதுசாரம் மற்றும் போதைப் பொருள் பாவனைக்கு அடிமையாகும் போது அது எமது மூளையை ஏமாற்றி சவால்களை எதிர்கொள்ளத் தேவையான வாழ்க்கைத்திறன் பண்புகளைச் சிதைத்து ஆளுமையற்ற மனிதர்களாக எம்மை மாற்றிவிடுகிறது.

இதனால் சுயமரியாதையற்ற, தனிநபர் சுகாதாரம் குலைந்த, சமூகப் பிறழ்வு நடத்தையுடைய சமூக விரோதச் செயற்பாடுகளில் ஈடுபடும் சமூகமொன்று உருவாகி வருகிறது.

மதுசாரம் மற்றும் போதைப் பொருள் பாவனை மூளையில் “டோப்போமின்” எனும் மகிழ்வைத் தூண்டும் ஓமோனையும் உடலில் “அதிரினலின்” எனும் உடலை சண்டைக்குத் தயாராக்கும் ஓமோனையும் அதிகளவில் சுரக்கத் தூண்டும்.



அந்த நிலைமைதான் இயல்பான நிலை என்ற எண்ணம் மூளைக்கு ஏற்படுவதால் மூளை அதனை மீண்டும் மீண்டும் எதிர்பார்க்கும். அத்துடன் பாவிக்கும் தடவைகள் அதிகரிக்க அதிகரிக்க குறித்தளவான சந்தோசத்தைப் பெற அதிகளவான மதுசாரம் மற்றும் போதைப் பொருளை பாவிக்க வேண்டிய தேவை ஏற்படும்.

போதைப் பொருட்கள் இரசாயனப் பொருள்கள் என்பதால் மூளையின் செயல் முறையில் பாதிப்பை ஏற்படுத்தி மன அழுத்தம்,தொடர்பாடல் சிக்கல்கள், ஆளுமைப் பிறழ்வுகள், தற்கொலை எண்ணங்கள், சுயகௌரவமின்மை, கவனம் செலுத்த முடியாமை, ஞாபகத்திறன் இழப்பு, கற்றலில் நாட்டமின்மை, சமூக உறவிலிருந்து விலகுதல், குற்றச் செயல்கள் மற்றும் சமூக விரோத செயலில் ஈடுபடுதல் போன்ற நிலைமைகளுக்கு உட்படுத்தி விடுகின்றது.

காலப்போக்கில் இதய நோய்கள், சிறுநீரகக் கோளாறுகள், நரம்புசார்ந்த வலுவின்மைகள், ஈரலில் பாதிப்பு மற்றும் புற்றுநோய் எனும் நோய்நிலைகளையும் ஏற்படுத்தி உயிரைப் போக்கி விடுகின்றன.

எனவே நாம் இதிலிருந்து பாதுகாப்புப் பெற்று சிறந்ததொரு எதிர்கால சந்ததியை நிலைநாட்ட போதை எனும் கொடிய அரக்கனுக்கு எதிராக ஒன்றிணைந்து போராட வேண்டும்.

போதைப் பழக்கமுடையோருடன் நட்பைத் தவிர்த்தல், எந்தவொரு போதைப் பொருளையும் பரிசீலித்துப் பார்க்காதிருத்தல், சட்ட மற்றும் சமூக விழுமியங்களை மதித்து ஒழுகுதல், கல்வியிலும் இணைபாடவிதான செயற்பாடுகளிலும் ஈடுபடல், நல்ல பொழுது போக்குகளில் நாட்டங்கொள்ளல் மற்றும் வாழ்க்கைத் திறன்களை தம்மில் வளர்த்துக் கொள்ளல் என்பன போதைப் பொருளுக்கு உட்படாமல் பாதுகாப்பைப் பெறும் வழிகளாகும்.

எனவே அனைவரும் உங்களுக்குக் கிடைத்த அழகிய வாழ்வை பெறுமதியுள்ளதாகவும் தரமானதாகவும் வடிவமைத்துக் கொள்ள முயலும்போது நீங்கள் எதிர்கால சமூகத்தின் சிற்பிகளாக திகழுவீர்கள் .- என்றார்.

# மாட்டுப்பளை மடத்தடி மீனாட்சி அம்மன் ஆலய புதிய நிர்வாகம் தெரிவாகியது

(வி.ரி.சகாதேவராஜா)

மாட்டுப்பளை மடத்தடி மீனாட்சி அம்மன் ஆலயத்தின் புதிய தலைவராக சமுகசேவையாளரும், காரைதீவு பிரதேச சபையின் முன்னாள் தவிசாளருமான கலாநிதி கிருஸ்ணபிள்ளை ஜெயசிறில் மீண்டும் ஏகமனதாக தெரிவு செய்யப்பட்டார்.

ஆலயத்தின் வருடாந்த பொதுச் சபைக் கூட்டம் சனிக்கிழமை (22) மீனாட்சி அம்மன் பழைய சந்நிதானத்தில் பரிபாலன சபையின் ஆலோசகரும் புதிய நிர்வாக சபைத் தெரிவுக்கான தற்காலிக தலைவருமான விபுலமாமணி வி.ரி.சகாதேவராஜா தலைமையில் நடைபெற்றது.

அச்சமயம் புதிய நிர்வாக சபை முறைப்படி தெரிவு செய்யப்பட்டது.

கடந்த 10 வருடங்களுக்கு பின்னர் நடைபெற்ற இந்தப் பொதுக் கூட்டம் ஆலய குரு சிவ ஸ்ரீ சபா.கோவர்த்தன சர்மா, அம்பாறை மாவட்ட இந்து கலாசார உத்தியோகத்தர் கு.ஜெயராஜி ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது



தலைவராக மீண்டும் கி.ஜெயசிறில், செயலாளராக மீண்டும் த.சண்முகநாதன், பொருளாளராக மீண்டும் அ.சுந்தரராஜன் தெரிவு செய்யப்பட்டனர். மூவருக்கும் முறைப்படி உரிய ஆவணங்கள் கையளிக்கப்பட்டன.

உபதலைவர்களாக பி.சண்முகராசா, ஏ.காராளசிங்கம், கே.கனேசன், உப செயலாளராக எஸ்.சிறிகாந்தன், கணக்காளர்களாக கே.உமாரமணன், கே.குழந்தைவடிவேல் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர்.

ஆலோசகர்களாக வி.ரி.சகாதேவராஜா, சி.அரியநாயகம் ஆகியோர் சபையால் ஏகமனதாகத் தெரிவுசெய்யப்பட்டனர்.

நிர்வாக சபை உறுப்பினர்களாக அம்பாறை மாவட்டத்தின் சகல தமிழ்ப் பிரதேசங்களில் இருந்தும் 21 பேர் தெரிவு செய்யப்பட்டனர்.

# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்



259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## கறுப்பு தேசம்

இலங்கைத் தீவில் தேசிய இனப் பிரச்சினை கடந்த 75 ஆண்டுகளுக்கு மேல் தீர்க்கப்படாமல் பெரும் பிணியாக நீளுகின்றது.

இந்தத் தேசிய இனப் பிரச்சினைக்கு வித்திட்டவர்கள் - மூல காரணகர்த்தாக்கள் - யார் என்று தேடிப் பார்த்தால் அந்தக் குற்றச்சாட்டு விரல் காலனித்துவ ஆட்சியாளர்களான வெள்ளையர்களை நோக்கியே நீளும்.

இந்தத் தீவில் தேசிய இனப் பிரச்சினைக்கு வித்திட்ட அவர்கள், அந்தக் காலதிகால வரலாற்றுத் தவறில் இருந்து தம்மைத் திருத்திக் கொள்ளாமல் மென்மேலும் தவறிழைத்து வருகின்றார்கள்.

பதினாறாம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் முதல் அந்நியர்களாக போர்த்துக்கேயர்கள் இந்தத் தீவுக்குள் காலடி எடுத்து வைத்த போது, இங்கு இரண்டு தேசிய இனங்களின் தனித்தனி தேசங்களையே கண்டனர்.

தனியான மொழி, கலாசாரம், பழக்க வழக்கங்கள், தொடர்ச்சியான தாயக வாழிடம், வழக்காறுகள், வாழ்க்கை முறைமைகளுடன் இறையாண்மை கொண்ட அரசாக - வடக்கும் கிழக்கும் தமிழர் இராச்சியமாக - விளங்கியமையையே அவர்கள் கண்டனர். அதுபோலவே தெற்கில் சிங்களவர் இராச்சியமும் நிலை கொண்டிருந்தது.

இலங்கைத் தீவைக் கொஞ்சம் கொஞ்சமாகக் கைப்பற்றித் தமது கட்டுப்பாட்டை விஸ்தரித்துக் கொண்ட போர்த்துக்கேயரும், பின்னர் அவர்களிடமிருந்து அதனைப் பற்றிக் கொண்ட ஒல்லாந்தரும் கூட இலங்கைத் தீவின் இரண்டு தேசங்கள் என்ற இறையாண்மைக் கட்டமைப்பைக் குழப்பவில்லை. அவற்றை இரண்டு தேசங்களாகவே நிர்வாகித்து ஆட்சி செய்தனர்.

அதன்பின்னர் ஒல்லாந்தர்களிடமிருந்து இலங்கையைக் கைப்பற்றிக் கொண்ட ஆங்கிலேயர்கள் - பிரிட்டிஷார் - ஆரம்பத்தில் இந்தத் தீவை இரண்டு தனித் தனிக் கட்டமைப்புகளாகவே நிர்வகித்த போதிலும், 1832 இல் தமது நிர்வாக வசதிக்காக இரண்டையும் ஒரே ஆளுநரின் கீழ் கொண்டு வந்தனர்.

அப்படியே 1948 வரை தமது காலனித்துவ ஆட்சியைத் தொடர்ந்த வெள்ளையர்கள், இலங்கைக்குச் சுதந்திரம் வழங்கிய போது தாம் தமது நிர்வாகத்திற்காக ஒன்று சேர்த்த இரண்டு தேசங்களையும் ஒன்றுபட்ட நிலையில், அப்படியே இலங்கையின் பெரும்பான்மையினரின் வசம் கையளித்துச் சென்றனர்.

இதனால் வெளிநாட்டு அந்நியரின் அடிமைத்தனத்தில் சிக்கிக் கொண்டிருந்த தமிழர் தேசத்தின் இறையாண்மை சிங்களப் பேரினவாத அடக்குமுறையாளர்களின் கைகளுக்கு மாறியது.

இதுவே இலங்கைத் தீவில் கடந்த 75 ஆண்டு காலமாக தேசிய இனப் பிரச்சினை பெரும் இனப்போராகப் பூதாகர வடிவெடுக்கக் காரணமாயிற்று.

இலங்கைத் தமிழர்களுக்கு அந்த வரலாற்றுப் பெருந்தவறை இழைத்த வெள்ளையர் தேசம், இன்னும் திருந்துவதாக இல்லை. அதன் அந்தத் துரோகத்தனம் தொடர்வதை பாதிப்புற்ற - நலிவுற்ற - தமிழர் தேசம் மற்றொரு அடக்கு முறையின் அங்கமாகப் பார்த்திருக்க வேண்டிய நிலைமையே நீடிக்கின்றது.

இலங்கையில் தான் அடிமைப்படுத்தி, பின்னர் பெரும்பான்மையினரான சிங்களவர்கள் இடம் ஒப்படைத்த தமிழர் தேசத்தின் இறையாண்மையை மீட்டெடுப்பதற்காக, தங்களையே ஈகம் செய்து தமிழ்ப் போராளிகள் நடத்திய தியாகப் போராட்டத்தை 'பயங்கரவாதமாக' சித்திரித்துக் கொச்சைப்படுத்திய வெள்ளையர் தேசம், அந்தக் கட்டமைப்பை அழிப்பதற்காக பௌத்த - சிங்கள பேரினவாதம் புரிந்த அரச பயங்கரவாதத்திற்குப் பக்கத்துணையாக நின்று, அந்தப் பேரழிவைத் தமிழர் தேசம் மீது வெற்றிகரமாக சுமத்தியது.

முடிவுற்றுப் போன புலிகளின் சரித்திரத்துக்கு உயிர் கொடுத்து, அந்த அமைப்பின் மீதான தடையை நீடிப்பதற்கு 'பயங்கரவாதம்' என்று அடையாளப்படுத்தலை பிரயோகிக்கும் வெள்ளையர்களின் தேசம், தான் அடையாளம் கண்டு, ஜெனிவா ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸிலில் தானும் சேர்ந்து தீர்மானம் மூலம் நிறைவேற்றி, உறுதிப்படுத்திய இலங்கை ஆட்சி பீடத்தின் 'அரச பயங்கரவாதம்' தொடர்பில் நடவடிக்கை எடுக்க வக்கற்று வாளா நிற்கின்றது.

தமிழர் தேசம் மீது புரியப்பட்ட யுத்த குற்றங்கள், மனித குலத்துக்கு எதிரான கொடூரங்கள், மோசமான மனித உரிமை மீறல்கள் விடயத்தில் 15 ஆண்டுகளாக தீர்மானங்கள் மேல் தீர்மானங்கள் நிறைவேற்றி பார்த்திருக்கும் வெள்ளையர் தேசம், நலிவுற்ற தமிழர் தரப்பு மீது மாத்திரம் தன் கைவரிசியை காட்டுவதன் மூலம் தான் வெள்ளையர் தேசம் அல்ல, கறுப்பு தேசம் என்பதை நிரூபித்து நிற்கிறது என்பதுதான் உண்மை.




# வரலாற்றுத்துறையைச் சேர்ந்த மாணவர்களது உள்ளக பயிற்சிக்கான நூலக அறிமுக நிகழ்வு

(த.சுபேசன்)

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகக் கலைப்பீட வரலாற்றுத்துறையை சேர்ந்த மாணவர்களின் உள்ளக பயிற்சிக்கான நூலக அறிமுக நிகழ்வு யாழ். சுண்டிக் குழியில் அமைந்துள்ள நூலக நிறுவனத்தில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வரலாற்றுத்துறை தலைவரும் சிரேஷ்ட விரிவுரையாளருமான திருமதி சாந்தினி அருளானந்தம், வரலாற்றுத்துறையை சேர்ந்த மாணவர்கள், நூலக நிறுவன பிரதம நிறைவேற்று அலுவலர், துறை சார் தலைவர்கள் மற்றும் நூலகப் பணியாளர்களும் கலந்துகொண்டனர்.

நிகழ்வின் போது நூலக நிறுவனம் பற்றிய தெளிவுப்படுத்தல், வரலாற்றுத் துறை தலைவரின் கருத்துரை, நூலக பிரதம நிறைவேற்று அலுவலரின் உரை, உள்ளகப் பயிற்சியாளர்களாக கலந்து கொண்டவர்களின் அறிமுகம் மற்றும் நிறுவனத்தின் துறைசார் செயற்பாடுகள் பற்றிய விளக்கம் ஆகியன இடம்பெற்றன.





# முன்பள்ளியில் போசாக்கு தொடர்பாகக் கண்காட்சி





(த.சுபேசன்)

ஜெயபுரம் குடும்ப நல உத்தியோகத்தர் பிரிவிலுள்ள தாய்மார் கழகங்களின் ஏற்பாட்டில் ஜெயபுரம் கதிர் முன்பள்ளியில் போசாக்கு தொடர்பான கண்காட்சி இடம்பெற்றது.

இதன் போது கருத்துரைத்த குடும்ப நல உத்தியோகத்தர், பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகள் நன்றாக படித்து அதிக புள்ளிகள் பெற வேண்டும் என நினைப்பதுடன் தமது எண்ணங்களை நிறுத்திவிடுகின்றனர். ஆனால் பிள்ளைகள் நன்றாக படித்து அதிக புள்ளிகள் பெறுவதற்கு என்ன தேவை என்பதைச் சிந்தித்து அதனை வழங்கப் பெற்றோர்கள் தவறி விடுகின்றனர்.

அதிக ஞாபகசக்தி இருந்தால் தான் பிள்ளைகள் பரீட்சையில் அதிக புள்ளிகளைப் பெற முடியும். எனவே ஞாபக சக்தியை அதிகரிக்க வேண்டும் என்றால் பிள்ளையின் மூளையானது நல்ல நிலையில் இயங்க வேண்டும்.

உடல் பருமனை அதிகரிக்கும் மாப்பொருள் மற்றும் கொழுப்பு , சீனி போன்ற உணவுகளால் மூளை வளர்ச்சி ஏற்படாது.

எனவே சூழலில் கிடைக்கும் இலை, காய்கறி வகைகளையும் தானியங்களையும் உங்கள் பிள்ளைகளின் நாளாந்த உணவுகளில் அதிகளவு சேர்த்து வழங்குவதன் மூலமும், முட்டை பசும்பால் போன்றவற்றை நாளாந்தம் பிள்ளைகளுக்கு வழங்குவதன் மூலமும் பிள்ளைகளின் உடல் வளர்ச்சியையும், மூளை வளர்ச்சியையும் அதிகரிப்பது மட்டுமல்லாமல் செலவுகளையும் சிக்கனப்படுத்தலாம்.

இதனூடாகவே எதிர்காலத்தில் சிறந்த கல்வி அறிவு மிக்க சமுதாயத்தை கட்டியெழுப்ப முடியும் என்று தெரிவித்திருந்தார்.

# பெண் தலைமைத்துவக் குடும்பங்களுக்கு வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் விழிப்புணர்வு





(ஆ.ரமேஸ்)

நுவரெலியா மாவட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட பெண் தலைமைத்துவ குடும்பங்களுக்கு வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் வகையில் அவர்களுக்கான விழிப்புணர்வை பிரிடோ நிறுவனம் வழங்கியது.

கொட்டக்கலையில் அமைந்துள்ள பிரிடோ நிறுவன மண்டபத்தில் இந்த விழிப்புணர்வு தொடர்பான நிகழ்வு சனிக்கிழமை (22) இடம்பெற்றது.

பிரிடோ நிறுவன நிகழ்ச்சி திட்ட முகாமையாளர் என்.கருணகரன் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் திருமதி கிருஷ்ணவேணி மற்றும் திட்ட அதிகாரிகளுடன், நுவரெலியா மாவட்டத்தில் கிராம மற்றும் தோட்டப் பகுதியில் தெரிவு செய்யப்பட்ட பெண் தலைமைத்துவ குடும்பங்களை சேர்ந்த 69 பெண்கள் கலந்து கொண்டனர்.

இதன்போது பெண்களின் தலைமைத்துவத்தை கீழ் இயங்கும் குடும்பங்கள் தமது குடும்பம் மற்றும் அவர்களின் பிள்ளைகளின் கல்வியை மேம்படுத்துவதற்கும் மேலதிக குடும்பவருமானத்தை பெற்றுக் கொள்வதற்கும் அதிக கவனம் செலுத்தப்பட்டது.

அதேநேரத்தில் இப் பெண்களின் சுயதொழிலை ஊக்குவிற்பதற்காக அவர்கள் வாழக்கூடிய பிரதேசத்தில் இருக்கக்கூடிய வளங்களை பயன் படுத்தி காளான் பயிர்ச்செய்கை, நஞ்சற்ற பாரம்பரிய மரக்கறி வகைகளை உற்பத்தி செய்தல், வீட்டுத்தோட்ட பராமரிப்பு ஆகியவை தொடர்பில் விழிப்புணர்வு செய்யப்பட்டது.

மேலும் கிராமிய உணவு பண்டங்களை சுகாதார ரீதியாக தயாரித்து அவற்றை பதப்படுத்தி பொதியிட்டு விற்பனை செய்தல் தொடர்பாகவும், சந்தை வியாபாரத்தை முன்னெடுப்பதற்கான வியாபார யுத்திகள் தொடர்பாகவும் இந்நிகழ்வில் கலந்து கொண்ட விரிவுரையாளர் எஸ் .ராஜ்குமார் இலகுவான வழிமுறையில் கருத்துரைத்து விழிப்புணர்வு ஏற்படுத்தியமை குறிப்பிடத்தக்கது.



# மாவனல்லை பாதிபிய்யா மகாவித்தி. ஊடக குழு மாணவர்களுக்குப் பயிற்சி

(கே. எ. ஹமீட் )

மாவனல்லை, ஹெம்மாதகம, மடுள்போவை பாதுபிய்யா மஹா வித்யாலயத்தின் ஊடகப் பிரிவால் ஏற்பாடு செய்யப்பட்ட ஊடகப் பயிற்சி முகாம் நேற்று பாடசாலை விஞ்ஞான ஆய்வு கூடத்தில் அதிபர் ஏ. டப்ளியூ. இஸ்ஸைனுல் ஹுஸைன் தலைமையில் பாடசாலையின் ஊடகப் பிரிவுப் பொறுப்பாளர் ஆசிரியை எம். ஜ. நஜ்முன் னிஸா கண்காணிப்பில் இடம்பெற்றது.

இதில் மாணவர்களுக்குச் செய்தி எழுதுதல், செய்தி வாசித்தல், மேடை அறிவிப்பு, ஊடக நுட்பங்கள் என்பன ஆர். ஜே. மீடியா வலையமைப்பின் பணிப்பாளரும் சமூகப்பணி இளம் கலைமாணி மாணவரும் ஊடகத் துறையில் பல தேசிய விருதுகளைப் பெற்ற வானொலி அறிவிப்பாளருமான ஏ. எம். இன்ஷாப் விரிவுரை வழங்கியமை குறிப்பிடத்தக்கது.

இந்த நிகழ்வில் பாடசாலையின் ஊடகப் பிரிவு மாணவர்கள், பாடசாலை பழைய மாணவர்கள், ஆசிரியர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.



# பாலமுனையில் கிரிக்கெட் சுற்றுப்போட்டி; லீ ஸ்டார் விளையாட்டுக் கழகம் வெற்றி!

(எம்.எப்.றிபாஸ்)

பாலமுனை சுப்பர் ஓர்கிட் விளையாட்டுக்கழகத்தின் 37 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு ஏற்பாடு செய்த மென்பந்து கிரிக்கெட் சுற்றுப்போட்டி பாலமுனை ஹிக்மா வித்தியாலய மைதானத்தில் இடம்பெற்றது.

கழகத்தின் தலைவர் ஜே.அமீன் தலைமையில் இடம்பெற்ற இந்தச் சுற்றுப் போட்டியின் இறுதிப் போட்டியில் அக்கரைப்பற்று லீ ஸ்டார் மற்றும் டீன்ஸ் ஸ்டார் விளையாட்டுக் கழகங்கள் பங்குபற்றி லீ ஸ்டார் கழகம் வெற்றி பெற்றது.

அம்பாறை மாவட்டத்தைச் சேர்ந்த முன்னணிக் கழகங்கள் கலந்து கொண்ட இந்த நிகழ்வுக்கு ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் உயர்பீட உறுப்பினரும், மெட்றோபொலிடன் கல்லூரியின் தவிசாளருமான கலாநிதி சிராஸ் மீராசாஹிப் பிரதம அதிதியாகவும், அட்டாளைச்சேனை பிரதேச சபையின் முன்னாள் தவிசாளர் எம்.ஏ.அன்சில், கழகத்தின் ஆலோசகரும், அதிபருமான பீ.முஹாஜிரின், பாலமுனை மு. கா. அமைப்பாளர் அலியார் ஆகியோர் கௌரவ அதிதியாகவும் கலந்து கொண்டு வெற்றி பெற்ற கழகத்தினருக்கு வெற்றிக் கேடயங்களை வழங்கினர்.










# மாவடி பேர்ல்ஸ் விளையாட்டுக் கழகத்தின் சாதனையாளர் கௌரவிப்பும் வர்ண இரவும்!

**(மாளிகைக்காடு)**

காரைதீவு பிரதேச மாவடிபள்ளியில் இருந்து பல்கலைக்கழக அனுமதி பெற தகுதியானவர்கள், சாதனையாளர்கள் கௌரவிப்பும், மாவடிப்பள்ளி பிரிமியர் லீக் சுற்றுத் தொடரின் தொடக்கவிழாவும் மாவடி பேர்ல்ஸ் விளையாட்டுக் கழகத்தின் ஏற்பாட்டில் கழக தலைவரும், சம்மாந்துறை வலயக்கல்வி அலுவலக இஸ்லாம் பாட வளவாளருமான மௌலவி ஏ.ஜே.எம். அஸ்ரப் தலைமையில் வெள்ளிக்கிழமை இரவு மாவடிப்பள்ளி அஸ்ரப் மகா வித்தியாலய திறந்தவெளி அரங்கில் நடைபெற்றது.

அதி திறமை சித்திகளை பெற்று பல்கலைக்கழக அனுமதிக்கு தகுதி பெற்ற மாணவர்கள் மற்றும் அவர்களது பெற்றோர்கள் அதிதிகளால் நினைவுச் சின்னம் வழங்கிக் கௌரவிக்கப்பட்டனர். மாவடிப்பள்ளி பிரிமியர் லீக் சுற்றுத் தொடரின் நான்கு அணிகளும் அறிமுகம் செய்து வைக்கப்பட்டன.

இந்த நிகழ்வில் மயோன் குரூப் நிறுவன முகாமைத்துவ பணிப்பாளரும், றிஸ்லி கல்வி மைய தலைவருமான அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் அம்பாறை மாவட்ட இளைஞர் அமைப்பாளர் றிஸ்லி முஸ்தபா பிரதம அதிதியாக கலந்து கொண்டதுடன் சாய்ந்தமருது அல்- ஜலால் வித்தியாலய அதிபர் எம்.ஐ.எம். சைபுதீன், மாவடிப்பள்ளி அஸ்ரப் மகா வித்தியாலய அதிபர் வீ.எம். ஸம்ஸம், அல்- ஜலால் வித்தியாலய பிரதி அதிபர் ஏ.எல். றஜாப்தீன், கிழக்கு மாகாண கூட்டுறவு ஊழியர்கள் ஆணைக்குழு உறுப்பினர் யூ.எல்.என். ஹுதா உமர், அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் மற்றும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் மாவடிப்பள்ளி அமைப்பாளர்கள், அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள், விளையாட்டு கழகங்களின் நிர்வாகிகள், தொழிலதிபர்கள், பிரமுகர்கள் பலரும் அதிதிகளாகக் கலந்து கொண்டனர்.








EVEREST
FURNITURE
MODERN FURNITURE FOR YOUR HOME
(416) 332-0721
everestfurniture.ca
EverestFurnitureInc
80 FINCHDENE SQ MIX 1C1 SCARBOROUGH, CANADA

# ஹஜ்ஜுப் பெருநாளை சிறப்பிக்கும் கவியரங்கு!






**(அஷ்ரப் ஏ சமத்)**

கற்பிட்டி தமிழ் கலை இலக்கிய ஒன்றியம், ஹஜ்ஜுப் பெருநாளை சிறப்பிக்கும் முகமாக கற்பிட்டி அல் அக்ஸா தேசிய பாடசாலையின் கூட்ட மண்டபத்தில் ஹஜ் பெருநாள் கவியரங்கைத் தம்பி மரைக்கார் அரங்கில் அதிபர் எஸ்.எம் அறூஸ் தலைமையில் நடத்தியது.

இந்தக் கவியரங்கில் 8 கவிஞர்கள் கவி பாடினார்கள். எச்.எம். சுஜப் (கவிப் புயல்), எஸ்.எச்.எம் நவ்பர், ஜீ.குணசேகரன், எஸ்.சுப்ரமணியம், எம்.எம்.எம். ரவூப், பாத்திமா பர்வின் எம்.ரீ.றிபாஸ் மௌலவி, எம். கேஷினி மோகனதாஸ் ஆகியோர்கள் மேடையில் கவிதைகள் அழகாக பாடினார்கள். இதில் விசேஷம் அம்சம் என்னவென்றால் மூன்று தமிழ் இனக் கவிஞர்கள் பெருநாள் கவிதையில் நபி இப்ராஹீம், இஸ்மாயில் போன்ற வரலாறுகளை கவிகளாகப் பாடினர்.

இந்த நிகழ்வுக்குத் தினகரன், தினகரன் வாரமஞ்சரி ஊடக அனுசரனை வழங்கியிருந்தது. சிரேஷ்ட ஊடகவியலாளர் எம்.ஏ.எம். நிலாம் மற்றும் அஷ்ரப் ஏ சமத் ஆகியோர்களுடன் அல் அக்ஸா பாடசாலை உப அதிபர், ஆசிரியர்கள் இலக்கியவாதிகள் கலந்து கொண்டனர்.





# காலத்தை வென்ற காவியம் வெற்றித் திருமகன் கண்ணதாசன்!



**கவிஞர் கண்ணதாசனின் பிறந்த தினம் இன்றாகும். அதனை முன்னிட்டு இந்தக் கட்டுரை பிரசுரமாகிறது**

**மகாதேவஐயர் ஜெயராமசர்மா**
**மேனாள் தமிழ்மொழிக் கல்வி இயக்குநர், மெல்பேர்ன், ஆஸ்திரேலியா.**

காலத்தை வென்றவன் காவியம் ஆனவன், வேதனை தீர்ப்பவன், வெற்றித் திருமகன் எனப் பலவித முகங்களில் கண்ணதாசனை நான் பார்க்கின்றேன்.

சிறுகூடல் பட்டி என்னும் சிறிய கிராமத்தில் பிறந்து சிந்தனைகளின் ஊற்றாகப் புறப்பட்டவர்தான் கவி அரசர். முத்தையா – கண்ணதாசன் ஆனதே ஒரு முக்கிய சம்பவம்தான். "முத்தைத்தரு" என்று அருணகியாரைப் பாடவைத்து அவரது வாழ்க்கையையே மாற்றியது ஆண்டவனது அனுக்கிரகம். முத்தையா என்று தந்தை வைத்த பெயரும் அவரைச் சமூகத்தில் ஒரு முத்தாகவே மிளிரச்செய்தது. கண்ணதாசன் என்னும் பெயரும் அவருக்கு உலகில் பெரும் புகழைத் தேடித் தந்தது. இவை யாவும் ஆண்டவனின் அனுக்கிரகத்தால் ஆகியிருக்கலாம் என்று எண்ணத் தோன்றுகிறது.

அருணகிரியார் முருகன் அருள் பெற்றதால் மடைதிறந்த வெள்ளமெனச் சந்தப் பாடல்கள் வந்து குவிந்தன. எங்கள் கவியரசரும் ஆண்டவனின் வரம்பெற்று வந்தவராகையால் கம்பனுக்குப் பிறகு "சந்தத்தை" தமிழில் கையாண்ட பெருமைக்கு உரியவர் ஆகின்றார்.

நெற்றியில் விபூதியும், வாயிலே முருகனது நாமத்தையும் துணையென எண்ணி இருந்தவர் கண்ணதாசன். சேரக் கூடாத கூடாரத்துக்குள் சேர்ந்ததால் அவரின் பேச்சும் போக்கும், ஏன் எழுத்தும் கூட மாறியது. ஆனால் அவரின் அடிமனத்தில் ஆழமாகப் பதிந்து நின்ற ஆண்டவன் நினைப்பு மட்டும் அப்படியேதான் அடங்கிக் கிடந்தது. காலமும்கனிந்துவரக் கடவுள் நம்பிக்கை கண்ணதாசனிடம் மேலோங்கத் தொடங்கியது.

நாத்திகம் பேசி நாத்தமும் பேற்றியும், கடவுள் கண்டனம் செய்தும் நின்ற கண்ணதாசன் கடவுளே கதியென்னும் நிலைக்கு வந்து விட்டதை அவர் வாயிலாகவே நாங்கள் அறிந்து கொள்ளமுடிகிறது. "நாத்திகனாக இருந்தது இரண்டு, மூன்று , ஆண்டுகளே". கந்தபுராணம் , பெரியபுராணம், கம்பராமாயணம், திருவாசகம், திருப்பாவை, நாலாயிரம் திவ்யபிரபந்தம், வில்லிபாரதம் இவற்றை எல்லாம் கண்டனம் பண்ணப் படித்தேன். ஆனால் அவற்றைப் படிக்கப் படிக்க என்மனம் அவற்றில் ஆழ்ந்து விட்டது என்று அவரே சொல்லுகின்றார்.

"நாத்திக வாதம் என்பது அரசியல் நோக்கங் கொண்டது என்பதையும், உள்மனத்தின் உண்மையான உணர்வல்ல என்பதையும் உணர்ந்தேன்" என்பது கண்ணதாசனின் வாக்குமூலமாகும்.

கண்ணதாசன் அடிக்கடி விரும்பிக் கேட்கும் பாடல் என்ன தெரியுமா? "திருப்பாற் கடலில் பள்ளி கொண்டாயே ஸ்ரீமன் நாராயணா" என்பதாகும். அவரின் படுக்கை அறையில் வைத்திருந்த ஒரே படம் " கிருஷ்ணர்" படமாகும்.

இந்தியாவிலே கடவுளை நம்பாதவர்கள் ஒரு கட்சியாகக் கூட இருந்தாலும் அவர்கள் எல்லோரும் சேர்ந்து கடவுளைக் கண்டனம் செய்தாலும் அதனால் கடவுளுக்கு எந்தவித வருத்தமும் இல்லை. அதே வேளை கடவுள் நம்பிக்கையும் இல்லாமற் போய்விடவும் இல்லை. இதில் கண்ணதாசன் மிகவும் நம்பிக்கை உடை யவராக இருந்த படியால்த்தான் படித்தவர்களும் போற்றுகிறார்கள் பாமரரும் போற்றுகிறார்கள் என எண்ணத்தோன்றுகிறது. கடவுளைப் பற்றி சந்தேகம் வருபவர்களுக்கு,

**"தெய்வம் என்றால் அது தெய்வம்**
**வெறும் சிலை என்றால் அது சிலைதான்**
**உண்டென்றால் அது உண்டு**
**இல்லை என்றால் அது இல்லை"** என்று சொல்லும் விளக்கத்தைவிட வேறு எப்படிச் சொல்ல முடியும். இதுதான் கண்ணதாசன்.

சினிமாவுக்கு என்று எழுதப்பட்டாலும் உள்ளத்தில் இருப்பதுதானே வரமுடியும்.

**"பூஜ்ஜியத்துக் குள்ளே ஒரு ராஜ்ஜியத்தை**
**ஆண்டு கொண்டு புரியாமலே இருப்பான் ஒருவன்**
**அவனைப் புரிந்து கொண்டால்**
**அவன்தான் இறைவன்"**

பாமரரும் புரியும்படி கடவுள் தத்துவத்தைக் காட்டுவது அவரின் தனித்துவம்தானே.

ஆண்டவனின் அருள் அவருள் உறைந்து கிடந்தமையால்தான் அவரின் வார்த்தைகளில் அத்வைதம் இருந்தது. துவைதம் இருந்தது. விசிட்டாத்வைதமும் இருந்தது. வேதாந்தமும் சைவசித்தாந்தமும் கூட இருந்தன எனலாம்.

சரஸ்வதி அவரது நாவில் சம்மாணம் போட்டே இருந்தாள். மேலே காட்டிய தத்துவங்களை எவ்வாறு நாசூக்காகக் கண்ணதாசன் காட்டுகிறார் பாருங்கள்,

**"தெளிவாகத் தெரிந்தாலே சித்தாந்தம்**
**அது தெரியாமல் போனாலே வேதாந்தம்**
**மண்ணைத்தோண்டி கண்ணீர் தேடும் அன்புத்தங்கச்சி**
**என்னைத் தோண்டி ஞானம் கண்டேன் இதுதான் என்கட்சி**
**உண்மை என்ன பொய்மை என்ன**
**இதில் தேன் என்ன**
**கடிக்கும் தேள் என்ன ஞானப் பெண்ணே**
**தெய்வம் தந்த வீடு வீதி இருக்கு**
**இந்த ஊரென்ன**
**சொந்த வீடென்ன ஞானப் பெண்ணே**
**வாழ்வின் பொருளென்ன**
**நீ வந்த கதை என்ன"**

சகல வித தத்துவங்களும் இங்கே பாமரரரும் புரியச் சொல்லி நிற்கின்றார் கண்ணதாசன். இதனால் வெற்றித்திருமகன் தானே!

கவிஞன் என்பவன் ஒரு குறுகிய வட்டத்துக்குள் சிந்திக்கக் கூடாது. அவன் சொல்லும் கருத்துக்கள் உலகம் தழுவ வேண்டும் வள்ளுவர் குறள் அப்படிப்பட்டது தான். வள்ளுவரின் பரந்து விரிந்த நோக்கால் அவரின் திருக்குறள் உலகம் தழிவியதாக இருக்கிறது. நமது கவிஞரும் அப்படியான ஒரு மனநிலையில்தான் செயற்பட நினைக்கின்றார்.

வள்ளுவர், அறம், பொருள், இன்பம் பற்றியெல்லாம் பாடினார். கண்ணதாசனும் அறத்தை, இன்

தொடர்ச்சி▼

# காலத்தை வென்ற காவியம்
# வெற்றித் திருமகன் கண்ணதாசன்!

தொடர்ச்சி▲

பத்தை , பொருளை, எல்லாம் பாடினார். அத்தோடு அருளையும் தமது பாட்டுக்களால் தந்தும் நின்றார். சங்கரமடத்தைச் சரண் அடைந்தார்.

ஒருகாலத்தில் காவிகட்டியவர்களையும் சங்கர மடத்தாரையுமே சாடியவர் பின்பு தானாகவே சரண் புகுந்தார். இது அவரிடம் ஏற்பட்ட மடை மாற்ற மாகும்.அதே கண்ணதாசனே யேசு காவியத்தைப் பாடி மீண்டும் தனது நோக்கை விரிவாக்கிக் கொள் கின்றார். புத்தரைப் பாடுகிறார். நபிகளைப் பாடு கிறார். சத்தியம், நேர்மை, சமத்துவம் யாவற்றையும் போற்றிப் பாடுகின்றார்.

**'புத்தன் யேசு காந்தி பிறந்தது**
**பூமியில் எதற்காக தோழா**
**பூமியில் எதற்காக ....'** என்று கேள்வி எழுப்பி தனது நிலை எமக்கெல்லாம் காட்டி நிற்கின்றார் கவியரசர் அவர்கள்.

இறையுணர்வு ஊறிவிட்டால் யாவும் சிறந்த கருத்துக்களாகவே வந்து நிற்கும். அதில் பல தத்து வங்கள் வந்துவிடும். வேதத்திலும், உபநிடதத்திலும், உன்னை அறிதல் என்பது பெரிய அரிய பெரிய தத்துவமாகும். 'தத்துவம் அஸி, அஹம் பிரம் மாஸி' என்பன உபநிடதத்தின் உயிநாடியாகக் கருதப்படு கிறது.

ரமண மகரிஷியும் முதலில் நீ யார் என்பதை அறி என்றுதான் சொல்லுகிறார். இப்படியான உயர்தத் துவக் கருத்தை கண்ணதாசன் மிகவும் எளிதாக்கி எமக்குத் தரும்விதம் அவரின் உயராற்றலைத்தான் வெளிப்படுத்துகிறது எனலாம்.

**"உன்னை அறிந்தால் நீ உன்னை அறிந்தால்**
**உலகத்தில் போராடலாம்**
**வாழ்ந்தாலும் தாழ்ந்தாலும் தலை வணங்காமல்**
**நீ வாழலாம்"**

வாழ்ந்தாலும், தாழ்ந்தாலும், வாழுவோம் என்பது எல்லோரிடத்தும் எளிதாக் வரக்கூடிய தல்ல. அதற்கு ஒரு மனப்பக்குவம் தேவை. " நாமார்க்கும் குடியல்லோம் நமனை அஞ்சோம்' என்னும் நாவுக் கரசர் அஞ்சாவார்த்தை "தலை வணங்காமல் வாழுதலில்" தெரிகிறதல்லவா?

மனமானது சமநிலைக்கு வந்து விட்டால் எதற்கும் அது ஆயத்தமாகிவிடும். இது ஒரு யோக நிலையாகும். இதனைக்கவிஞர் எப்படிச்சொல்கிறார் பாருங்கள்.
" நான் – கடலளவே பெற்றாலும் மயங்கமாட்டேன் –அது கையளவே ஆனாலும் கலங்கமாட்டேன்" இந்த நிலை சாதாரணமாக எல்லோருக் கும் வந்து விடமாட்டாது என்பதைக் கவிஞரின் வரிகள் மிக அற்புதமாகக் காட்டிநிற்கின்றன் அல்லவா?

குழப்பங்கள் வருவது மனித வாழ்வில் தடுக்க முடியாத ஒன்று. ஆனால் அந்தக் குழப்பத்தையும் நாம் விளங்கி மனத்தைக் கலங்க விடக்கூடாது என்கின்றார் கவிஞர்.

**" மயக்கமா தயக்கமா மனதிலே குழப்பமா**
**வாழ்க்கையில் நடுக்கமா**
**வாழ்க்கை என்றால் ஆயிரம் இருக்கும்**
**வாசல் தோறும் வேதனை இருக்கும்"**

வாழ்க்கையில் குழப்பம் வந்தால் தயக்கம்வரும் அதேநேரம் நடுக்கமும் வந்தே சேரும். அரசன் முதல் ஆண்டிவரை அனைவருக்கும் இந்த நிலை வெவ்வேறு உருவத் தில் – வெவ்வேறு விதமாக வரும். எல்லார் வீட்டுக்கும் வாசற்படி இருபது போல வேத னைகளும் வீடுதோறும் இருக்கவே செய்யும். இது எத்தனை அனுபவமான ஒரு மிகப்பெரிய கருத்து. யாருமே வேதனைகளில் இருந்து தப்பித்துக் கொள்ளவே முடியாது.

எனவே "கலங்காதிருமனமே உன்கனவெல்லாம் நனவாகும் ஒரு தினமே" என ஆறுதலும் கூறுகின் றார் கண்ணதாசன்.

அதேவேளை,



**"வந்த துன்பம் எது என்றாலும்**
**வாடி நின்றால் ஓடுவதில்லை**
**எதையும் தாங்கும் இதயமிருந்தால்**
**இறுதிவரைக்கும் அமைதியிருக்கும்**
**நாளைப் பொழுதை இறைவனுக்களித்து**
**நடக்கும் வாழ்வில் அமைதியைத் தேடு"**

என்று புத்தியும் கூறுகின்றார். அதோடு நின்று விடாமல் மிகவும் முக்கியமாக ஒன்றையும் சொல்லி நிற்கின்றார்.

**"உனக்குக் கீழே உள்ளவர் கோடி**
**நினைத்துப் பார்த்து நிம்மதி நாடு"**

எப்பொழுதும் நாங்கள் அனைவருமே எங்களின் நிலையை மட்டுமே தினமும் பார்த்துப் பார்த்து எனக்கு மட்டும் ஏன் இப்படி? அவன் நல்லாய் இருகிறானே! என்று அல்லும் பகலும் மற்றவர்களைப் பார்த்து எமக்குக் கிடைத்தவற்றையும் வீணடித்து விடுவோம்.

காலுக்குச் செருப்பில்லை என்பவனுக்கும் கவலை. அதே நேரம் காலே இல்லை என்பவ னுக்கும் கவலை. கஞ்சிக்கு உப்பில்லை என்பவனுக் கும் கவலை. குடிக்கக் கஞ்சி இல்லையே என்பவ

தொடர்ச்சி▼

# காலத்தை வென்ற காவியம்
# வெற்றித் திருமகன் கண்ணதாசன்!



தொடர்ச்சி▲

னுக்கும் கவலை. இதில் எது முக்கியம் என்பதை உணராமல் இருப்பதே பெரிய கவலை என்பதை யாவரும் உணர்தல் வேண்டும் என்பதை கவிஞர் சொல்லுவதை விட யாராலும் இவ்வளவு எளிமையாகச் சொல்லி விட முடியாதல்லவா?

எத்தனையோ பேர் எம்மைவிடவும் மோசமாக இருக்கிறார்கள் என்பதை ஒர் கணம் நினைத்தால் நாங்கள் படும் துன்பம் பெரிதாகவே தெரியாமல் போய்விடும் என்பதைக் கண்ணதாசன் சொல்லும் இடத்தால் அவர் உயர்ந்த கவிஞ்ஞன் ஆகி நிற்கிறார் எனலாம்.

வாழ்க்கையில் அவர் அனுபவிக்காத இன்பங்களும் இல்லை.துன்பங்களும் இல்லை எனலாம். அவற்றை யெல்லாம் அவர் எங்களுக்குத் தனது கவிதைகள் வாயிலாகத் தரவும் மறக்க வில்லை.

**‘எங்கே வாழ்க்கை தொடங்கும் - அது**
**எங்கே எவ்விதம் முடியும்**
**இதுதான் பாதை இதுதான் பயணம்**
**என்பது எவருக்கும் தெரியாது’** இது பெரிய தத்துவம்தான். ஆனால் இதில் கவிஞரின் ஒரு பங்கும் காணப்படுகிறது. சிறு கூடல் பட்டியில் இருந்து சென்னை வந்து படுக்க இடமில்லாமல் கடற்கரை ஓரத்தில் படுக்க அங்கும் படுக்க முடியாமல் பொலிஸ் காரர்களால் கண்ணாதாசன் போக்கிடம் இல்லாமல் விரட்டி அடிக்கப்படுகிறார். அப்பொழுது அவரது வாழ்க்கைப் பயணம் எப்படி அமையப் போகிறது எங்கே முடியப் போகிறது என்பது அவருக்கே புரியாத ஒன்றாக இருந்திருக்கலாம் அல்லவா?

இதுவும் ஒரு கருத்தாயும் இருக்கலாம். அதே வேளை மனித வாழ்வை நாங்கள் தீர்மா னிக்கவும் முடியாதிருக்கும் என்பதும் கூட கருத்தாகலாம்தானே!

சுத்திச் சுத்தி கடவுளிடம்தான் கண்ணதாசன் வருகின்றார்.எதைச் சொல்லுவதா னாலும் கடவுளையும் கூடவே வைத்திருப்பார்.

**‘நல்லவர்க் கெல்லாம் சாட்சிகள் ரெண்டு ஒன்று மனட்சாட்சி**
**ஒன்று தெய்வத்தின் சாட்சியம்மா**
**நம்பிக்கை வைத்து கல்லையும் பார்த்தால்**
**தெய்வத்தின் காட்சியம்மா**
**அதுதான் உள்ளத்தின் சாட்சியம்மா**
**அதுதான் உண்மையின் சாட்சியம்மா’**

மனிதர்களே மனட்சாட்சிக்கு மதிப்பளியுங்கள். அல்லது தெய்வத்தை நம்புங்கள்.இப்படி செய்யாது விட்டால் அது உங்களுக்கு ஏற்றதல்ல அது நல்ல வாழ்வுக்கும் வழி வகுக்காது என்று சொல்லி எமக்கு நற்சிந்தனை வழங்குகின்றார் கண்ணதாசன் அவர்கள்.

அவரின் பாடல்கள் அழியாப் புகழ் பெற்றன என்பதில் எள்ளளவும் எந்தவித ஐயமும் இல்லை. ஆனால் கண்ணதாசன் வாழ்கின்றார் என்றால் அவரின் “ அர்த்த முள்ள இந்துமதம்” பெருங்காரணம் என்பதை எவருமே மறுக்க முடியாது. முப்பத்தெட்டு வருடங்கள் கவியரசனாகப் புவியையாண்டவன் கண்ணதாசன். எழுத்தாலும்,பேச்சாலும் எம்மைக் கட்டிப்போட்டவன். “வாழநினைத்தால் வாழலாம்” என்று தைரியம் கூறிய தமிழ்க் கவிஞன். ஆகவே அவன் காலத்தை வென்று , காவியமாக வெற்றித் திருமகனாகவே நிற்கிறான்.








# அடாத்தாகக் காணிகளை அபகரித்து பனைகளை அழிப்பது கவலை தருகிறது

## சிவில் அமைப்புக்களின் பிரதிநிதிகள் தெரிவிப்பு



( வாஸ் கூஞ்ஞ)

மன்னாரில் அடாத்தாக காணிகளை பிடித்து பெண்களின் வாழ்வாதாரமாக விளங்கும் பனை மரங்கள் கொத்து கொத்தாக அழிக்கப்படுவதை கேட்கும்போதும் பார்க்கும்போதும் மிக கவலை ஏற்படுகிறது என்று மன்னாருக்கு வருகைதந்திருந்த சிவில் அமைப்புகளின் பிரதியநிதிகள் கவலை தெரிவித்தனர்.

மன்னார் காற்றாலை மின் திட்டம் மற்றும் கனியவள மண்ணகழ்வு உட்பட மன்னார் தீவில் மக்கள் எதிர்கொள்ளும் பல்வேறு பிரச்சினைகள் தொடர்பாக ஆராயவெனத் தென்பகுதியைச் சேர்ந்த சிவில் அமைப்புக்களின் பிரதிநிதிகள் மன்னாருக்கு வருகை தந்திருந்தனர்.

மன்னார் பிரஜைகள் குழுவின் ஏற்பாட்டில் மன்னார் கறிற்றாஸ் வாழ்வுதயம் கேட்போர் கூடத்தில் நடை பெற்ற கலந்துரையாடலில் மன்னார் மாவட்ட பிரஜைகள் குழு உறுப்பினர்கள், தன்னார்வத் தொண்டு நிறுவன பணியாளர்கள், மன்னார் மாவட்ட சிவில் சமூக அமைப்புக்கள் மற்றும் பொது மக்கள் ஆகியோர் இந்தக் கலந்துரையாடலில் கலந்து கொண்டனர்.

இந்தக் கலந்துரையாடலில் சட்ட விரோத காணி அபகரிப்பு மற்றும் சுற்றாடல் தாக்க மதிப்பீட்டு அறிக்கை, விடத்தல் தீவின் 400 ஏக்கர் நில விடுவிப்பு தொடர்பில் வெளியிடப்பட்ட அரச சுற்று நிருபம் சிங்கள மொழியில் அமைந்துள்ளதோடு பிரதேச மக்களுக்கு இது தொடர்பான தெளிவூட்டல்கள் வழங்கப்படவில்லை என்பன போன்ற பல விடயங்கள் கலந்துரையாடப்பட்டன.

இது தொடர்பாகத் தென் பகுதியிலிருந்து வருகை தந்திருந்த பேச்சாளர் ஒருவர் கருத்து தெரிவிக்கையில்?,

வடக்கு, கிழக்கு மற்றும் தென் பகுதி மலையகம் உட்பட சகல இடங்களிலும் உள்ள மக்கள் இன மதம் பேதம் அல்லாத பசுமையை நோக்கி ஒரே உள்ளத்துடன் பயணிக்க வேண்டும் என்ற நோக்கில் சகல இன மதம் கொண்ட ஒன்றுபட்ட ஒரு அமைப்பாக நாங்கள் கடந்த இரண்டு வருடங்களாக பயணித்துக் கொண்டு இருக்கின்றோம்.

இந்த நிலையிலேயே நாங்கள் மன்னாருக்கும் வருகை தந்து இங்கு காணப்படும் பிரச்சினைகளை இனம் காணப்படுவது மட்டுமல்ல யாவரும் அறிந்து கொள்வதற்கான ஒரு எற்பாடாக இது அமைந்தள்ளது.

இங்கு தற்பொழுது அடாத்தாக காணிகளை பிடிப்பது பற்றியும் அத்துடன் பெண்களின் ஒரு முக்கிய வாழ்வாதாரத்தை கொண்டுள்ள பெருந் தொகையான பனைகள் அழிக்கப்பட்டு வருவதையும் நாங்கள் அறிந்து கவலை கொண்டுள்ளோம்.

அறிதல் புரிதல் கொண்ட ஒரு களமாகஎங்களது இந்த களபயணம் அமைந்துள்ளது.- என்றார்.

# திருக்கோணேஸ்வரர் ஆலய சூழலில் கசிப்பு விற்பனையில் ஈடுபட்டவர் கைது

திருகோணமலை திருக்கோணேஸ்வரர் ஆலய கடை தொகுதியில் கசிப்பு விற்பனையில் ஈடுபட்டு வந்த ஒருவரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

குறித்த சம்பவம் நேற்று (23) மாலை இடம் பெற்றுள்ளது. சம்பவத்தில் மிகிந்த புரம் வயது (42) என்ற குடும்பஸ்தரே கைது செய்யப்பட்டுள்ளார் என்று திருகோணமலை தலைமையக பொலிஸார் தெரிவித்தனர்.

சம்பவம் தொடர்பாகத் தெரிய வருவதாவது,

பொலிஸாருக்குக் கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையில் புனித பிரதேச குறித்த கோயில் கடைத் தொகுதியில் இளநீர் விற்பனையில் ஈடுபட்டு வந்தவரே இவ்வாறு ஒரு போத்தல் கசிப்புடன் கைதாகினார்.

15 போத்தல்களில் 14 போத்தல்களை விற்பனை செய்துள்ள நிலையில் எஞ்சியுள்ள ஒரு போத்தலுடன் கைது செய்யப்பட்டார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

கைது செய்யப்பட்ட நபர் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளார். நாளை (25) திருகோணமலை நீதிமன்ற நீதிவான் முன்னிலையில் ஆஜராகுமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளைத் திருகோணமலை தலைமையகப் பொலிஸார் முன்னெடுத்துள்ளனர்.



# கல்முனை கார்மேல் பற்றிமாவில் மாணவர், ஆசிரியர் கௌரவிப்பு

**(றியாஸ் ஆதம்)**

கல்முனை கார்மேல் பற்றிமா கல்லூரியில் க.பொ.த. உயர்தர பரீட்சைக்குத் தோற்ற பல்கலைக்கழகத்துக்குத் தெரிவு செய்யப்பட்ட மாணவர்கள் தங்களுக்கு கற்பித்த ஆசிரியர்களுக்கு நன்றி தெரிவிக்கும் நோக்கில் அக் கல்லூரி அதிபர் மற்றும் ஆசிரியர்களை பாராட்டிக் கௌரவித்தனர்.

இந்த மாணவர்களால் ஏற்பாடு செய்யப்பட்ட "சாதனையாளர்களைக் கௌரவித்தல்" என்றும் வரலாற்று முக்கியத்துவம்மிக்க விழா சனிக்கிழமை (22) கல்லூரி அதிபர் அருட்சகோதரர் எஸ்.இ.ரெஜினோல்ட் தலைமையில் இடம்பெற்றது.

பற்றிமா கல்லூரியின் பழைய மாணவியும் கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளருமான வைத்திய கலாநிதி திருமதி சகீலா இஸ்ஸடீன் இந்த நிகழ்வில் பிரதம அதிதியாகக் கலந்து சிறப்பித்தார். அத்துடன் அந்தக் கல்லூரியின் பழைய மாணவர்களான டாக்டர் மஹாலிங்கம் லெட்சியன், பொறியியலாளர் எம்.கிரிதரன், சட்டத்தரணி ரவீந்திரன் சுஜீதா ஆகியோர் நட்சத்திர அதிதிகளாகவும் கலந்து கொண்டனர்.

கல்லூரி பிரதி அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்கள் பாடசாலை அபிவிருத்தி குழுவினர், பழைய மாணவர்கள், நலன்விரும்பிகள் என பெருந்திரளானோர் கலந்து கொண்ட இந்நிகழ்வில் பல்கலைக் கழகத்திற்கு தெரிவு செய்யப்பட்ட மாணவர்களுக்கு கற்பித்த மற்றும் வழிகாட்டிய அதிபர் ஆசிரியர்கள் அதிதிகளினால் பாராட்டிக் கௌரவிக்கப்பட்டனர். இதேவேளை பல்கலைக்கழகத்திற்கு தெரிவு செய்யப்பட்ட மாணவர்களும் இந்நிகழ்வின் போது அதிதிகளால் பாராட்டிக் கௌரவிக்கப்பட்டனர்.











# இலங்கை அரசின் நடவடிக்கையைக் கண்டித்து இன்று இராமேஸ்வரம் மீனவர்கள் அடையாள வேலை நிறுத்தம்

## 800 க்கும் மேற்பட்ட விசைப்படகுகள் கரையில் நங்கூரமிட்டு நிறுத்தம்

## ஐயாயிரம் மீனவர்கள், பத்தாயிரம் சார்புத் தொழிலாளர்களுக்குப் பாதிப்பு

எல்லை தாண்டி மீன்பிடித்தனர் எனத் தெரிவித்து ராமேஸ்வரம் மீனவர்கள் 22 பேரை கைது செய்த இலங்கை அரசைக் கண்டித்தும், சிறையில் உள்ள மீனவர்களை உடனடியாக விடுதலை செய்ய மத்திய - மாநில அரசுகலை விரைந்து நடவடிக்கை எடுக்க வலியுறுத்தியும் இன்று ஒரு நாள் அடையாள வேலை நிறுத்த போராட்டத்தில் ராமேஸ்வரம் விசைப் படகு மீனவர்கள் ஈடுபட்டு வருகின்றனர்.

மீனவர்களின் இந்த வேலை நிறுத் தம் காரணமாக சுமார் 800க்கும் மேற்பட்ட விசைப்படகு மீன் பிடிக்கக் கடலுக்குச் செல்லாமல் கரையில் நங்கூரமிட்டு நிறுத்தப்பட்டுள்ளன. 5 ஆயிரத்திற்கும் மேற்பட்ட மீனவர்கள் வேலை இழந்துள்ளனர்.

ராமநாதபுரம் மாவட்டம் ராமேஸ்வரம் மீன் பிடி துறைமுகத்தில் இருந்து கடந்த சனிக்கிழமை காலை 507 மீன்பிடி விசைப்படகுகளில் 5 ஆயிரத்திற்கும் மேற்பட்ட மீனவர்கள் மீன்பிடி அனுமதி பெற்று கடலுக்குள் மீன்பிடிக்கச் சென்றனர்.

ஞாயிற்று கிழமை அதிகாலை மீன வர்கள் நெடுந்தீவு கடற்பரப்பில் மீன் பிடித்துக் கொண்டிருக்கும் போது அப் பகுதியில் ரோந்து பணியில் ஈடுபட்டிருந்த இலங்கை கடற்படையினர் எல்லை தாண்டி மீன் பிடித்தனர் எனத் தெரிவித்து ஜஸ்டின், ரெயிமென்ட் மற்றும் கெரின் ஆகியோருக்கு சொந்தமான 3 மீன் பிடி விசைப் படகுகளையும் அதில் இருந்த சுரேஷ் பாபு, காளிதாஸ், ரூபின், கண்ணன், நாகராஜ் உள்ளிட்ட 22 மீனவர்களையும் கைது செய்து ஊர்க் காவற்றுறை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தி யாழ்ப்பாணம் சிறையில் அடைத்தனர்.

இதனை அடுத்து நேற்று ராமேஸ் வரம் அனைத்து விசைப்படகு மீனவ சங்க தலைவர்கள், மீனவர்கள் மற்றும் விசைப்படகின் உரிமையாளர்கள் ராமேஸ்வரம் துறைமுகத்தில் அவசர ஆலோசனைக் கூட்டம் நடத்தினர்.

அந்தக் கூட்டத்தில் எல்லை தாண்டி மீன்பிடித்ததாக ராமேஸ்வரம் மீனவர்கள் 22 பேரை கைது செய்த இலங்கை கடற்படையை கண்டித்தும், சிறையில் உள்ள மீனவர்களை உடனடியாக விடு தலை செய்ய மத்திய - மாநில அரசுகள் துரித நடவடிக்கை எடுக்க வலியுறுத்தி யும் வேலை நிறுத்தப் போராட்டத்தில் ஈடுபட முடிவு செய்தனர்.

அதன் அடிப்படையில் இன்று ராமேஸ் வரம் மீனவர்கள் மீன்பிடிக்க கடலுக்கு செல்லவில்லை. மீனவர்கள் இந்த வேலை நிறுத்தம் காரணமாக சுமார் 800-க்கும் மேற்பட்ட விசைப்படகுகள் மீன்பிடிக்கச் செல்லாமல் கரையில் நங்கூரமிட்டு நிறுத்தப்பட்டுள்ளதுடன் 5 ஆயிரத்திற்கும் மேற்பட்ட மீனவர்கள், 10 ஆயிரத்துக்கும் மேற்பட்ட சார்பு தொழிலாளர்கள் மறைமுகமாகவும் வேலை இழந்துள்ளனர்.

இந்த வேலை நிறுத்ததால் ஒரு கோடி ரூபா அந்நிய செலவாணி பாதிக் கப்பட்டதுடன் ராமேஸ்வரம் மீன் பிடி துறை முகம் வெறிச்சோடி காணப்படுகிறது.



# ரஷ்ய மதவழிபாட்டுத் தலங்களில் நடந்த தாக்குதலில் 17 பேர் பலி



**மொஸ்கோ, ஜுன் 24**

ரஷ்யாவில் மதவழிபாட்டு தலங்களில் பயங்கரவாதிகள் நடத்திய தாக்குதலில் 17 பேர் உயிரிழந்தனர்.

ரஷ்யாவின் காக்கசஸ் மாகாணம் மக்கஞ்கலா, டர்பெண்ட் ஆகிய நகரங்களில் உள்ள மதவழிபாட்டு தலங்கள் மீது பயங்கரவாதிகள் நேற்று இரவு (அந்நாட்டு நேரப்படி) பயங்கரவாதத் தாக்குதல் நடத்தினர். கிறிஸ்தவ மற்றும் யூத மதவழிபாட்டு தலங்களை குறிவைத்து தாக்குதல் நடத்தப்பட்டது. மதவழிபாட்டு தலங்களுக்குள் புகுந்த பயங்கரவாதிகள் துப்பாக்கிச்சூடு நடத்தினர். மேலும், மதபோதகரை கழுத்தறுத்துக் கொலை செய்தனர். பின்னர், மதவழிபாட்டு தலங்களை தீவைத்து கொளுத்தினர்.

அதேபோல், டர்பெண்ட் நகரில் உள்ள பொலிஸ் சோதனைச்சாவடியை குறிவைத்தும் பயங்கரவாதிகள் தாக்குதல் நடத்தினர். இந்த கொடூர தாக்குதலில் 17 பேர் உயிரிழந்தனர். இதில் பெரும்பாலானோர் பொலிஸார் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனை தொடர்ந்து பயங்கரவாத தாக்குதல் நடந்த நகரங்களுக்கு கூடுதல் படையினர் விரைந்துள்ளனர். பயங்கரவாதிகள் - பாதுகாப்புப்படையினர் இடையே துப்பாக்கிச்சண்டை தொடர்ந்து நடைபெற்று வருகிறது. பாதுகாப்புப் படையினர் நடத்திய தாக்குதலில் 6 பயங்கரவாதிகள் சுட்டுக்கொல்லப்பட்டனர் என்று கூறப்பட்டது.

இந்தப் பயங்கரவாதத் தாக்குதல் ஐ.எஸ். பயங்கரவாத அமைப்பால் நடத்தப்பட்டதாக முதற்கட்ட தகவல் வெளியாகியுள்ளது. முன்னதாக, கடந்த மார்ச் மாதம் ரஷ்யத் தலைநகர் மொஸ்கோவில் இசைநிகழ்ச்சி நடந்த அரங்கில் புகுந்து ஐ.எஸ். பயங்கரவாதிகள் நடத்திய தாக்குதலில் 137 பேர் கொல்லப்பட்டனர் என்பது குறிப்பிடத்தக்கது.



# பூமியுடன் மோத வரும் குறுங்கோள் 72 சதவீதம் வாய்ப்பு எனவும் தகவல்

**வொஷிங்டன், ஜுன் 24**

அமெரிக்காவின் நாசா விண்வெளி ஆய்வு மையம், பூமி மீது மோத கூடிய குறுங்கோள் பற்றிய ஆய்வை கடந்த ஏப்ரலில் மேற்கொண்டது. இந்த ஆய்வு முடிவை கடந்த 20 ஆம் திகதி அது வெளியிட்டது.

இதன்படி, வருகிற 2038 ஆம் ஆண்டு ஜுலை 12 ஆம் திகதி (14.25 ஆண்டுகள் எச்சரிக்கை காலம்) பூமி மீது குறுங்கோள் மோதுவதற்கான வாய்ப்பு 72 சதவீதம் என்ற அளவில் உள்ளது.

அமெரிக்காவின் மேரிலேண்ட் மாகாணத்தில் லாரெல் நகரில் உள்ள ஜான்ஸ் ஹாப்கின்ஸ் இயற்பியல் ஆய்வகத்தில் வெளியிடப்பட்ட இந்த ஆய்வு முடிவில், சக்தி வாய்ந்த குறுங்கோள் ஒன்று பூமியை 72 சதவீதம் தாக்க கூடிய சாத்தியக்கூறு உள்ளது என்ற அதிர்ச்சி தகவல் தெரிய வந்துள்ளது.

அமெரிக்காவின் பல்வேறு அரசு அமைப்புகள் மற்றும் சர்வதேச குழுவினர் என 100 பிரதிநிதிகள் வரை இணைந்து இந்த ஆய்வை மேற்கொண்டனர். இந்த பெரிய குறுங்கோள் மோதலானது இயற்கைப் பேரிடரில் ஒன்றாக இருக்கிறது. எனினும், தொழில்நுட்ப உதவியுடன், மனித குலம் அதனை முன்பே கணிக்க கூடிய ஒன்றாகவும் உள்ளது.

இதுதவிர, இதனை பல ஆண்டுகளுக்கு முன்பே கண்டறிந்து, அதனை தடுப்பதற்கான நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டுவருகின்றனஎனவொஷிங்டனில் செயல்பட்டு வரும் நாசா தலைமையகத்தின் கோள்கள் பாதுகாப்பு அதிகாரியான லிண்ட்லே ஜான்சன் கூறியுள்ளார்.

எனினும், இந்த முதல்கட்ட ஆய்வில் குறுங்கோளின் அளவு, அதில் கலந்துள்ள பொருள்கள் மற்றும் நீண்டகால இயங்கு பாதை உள்ளிட்ட விவரங்களை சரியாக தீர்மானிக்க முடியவில்லை என்று நாசா தெரிவித்து உள்ளது. இந்த குறுங்கோள் மோதலை தடுக்க போதிய அளவில் நாம் தயாராக இல்லை என்றும் நாசா தெரிவித்து உள்ளது.

பக்கங்கள் 06

கனடா முரசு

திங்கட்கிழமை 24/06/2024

## காட்டுத் தீயினால் சிறை இடமாற்றம்

லூகா ரோக்கோ மக்னோலியா மற்றும் ராபர்ட் பிக்டன் உள்ளிட்ட பிரபல கொலைகாரர்களை அடைத்து வைத்திருந்த கியூபெக்கில் உள்ள அதிகபட்ச C2




இன்றைய இடைத் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்கள் இடமிருந்து வலமாக லிபரல் வேட்பாளர் லெஸ்லி சேர்ச், கன்சர்வேட்டிவ் வேட்பாளர் டொன் ஸ்டுவார்ட், புதிய ஜனநாயகக் கட்சி வேட்பாளர் அம்ரித் பர்ஹர்.

# பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோவின் தலைமைக்கு இன்றைய இடைத்தேர்தல் சோதனைக் களம்



பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ

**இது வரை ஆளும் லிபரல் கட்சியின் கோட்டையாக இருந்து வரும் ரொறன்ரோ சென்ட் போல்ஸ் தொகுதியில் இன்று நடக்கும் இடைத்தேர்தல் பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோவின் தலைமைக்கான சோதனைக் களமாக மாறக் கூடும் என அவதானிகள் கூறுகின்றனர்.**

லிபரல் கட்சியின் ஆட்சிக்கு எதிராக வளர்ந்து வரும் அரசியல் அதிருப்தி, இந்த ஒன்ராறியோ இடைத்தேர்தலில் கன்சர்வேடிவ் முன்னேற்றத்திற்கு வழிவகுக்கக் கூடும் எனவும் கருதப்படுகின்றது.

இந்த இடைத்தேர்தல் முடிவுகள் எதிர்வரும் ஆண்டு நடைபெறவுள்ள பொது தேர்தல் முடிவுகளின் பிரதிபலிப்பாக கருதப்பட முடியும் என பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ தாமே ஏற்கனவே சுட்டிக்காட்டி இருந்தார் என்பதும் கவனிக்கத் தக்கது.

இடைத்தேர்தல முடிவுகள் மக்களின் மெய்யான பிரதிபலிப்பாக அமையும் என பிரதமரே தெரிவித்துள்ளார்.

சென் போஸ் தொகுதி நீண்ட காலமாக லிபரல் கட்சியின் ஆதிக்கத்தில் காணப்படு C2

## கடந்த தடவை தேர்தல் முடிவுகள்

Toronto-St. Paul's

| | | | |
|---|---|---|---|
| LIB | Bennett, Carolyn | 26,429 | 49.2% |
| CON | Osadchuk, Stephanie | 13,587 | 25.3% |
| NDP | Coles, Sidney | 9,036 | 16.8% |
| GRN | De Luna, Phil | 3,214 | 6% |
| PPC | Remedios, Peter | 1,432 | 2.7% |

# பழைய மொண்ட்ரீயல் பிரதேசத்தில் கடத்தப்பட்ட நால்வரில் மூவர் மீட்பு




பழைய மொண்ட்ரீயல் பகுதியில் நால்வர் கடத்தல் தொடர்பான விசாரணை கியூபெக் மாகாணப் பொலிஸுக்கு மாற்றப்பட்டுள்ளது.

கடத்தப்பட்ட நால்வரில், 20 வயதிற் குட்பட்ட இரண்டு பெண்கள் மற்றும் ஓர் ஆண என மூவர் பாதுகாப்பாகக் கண்டுபிடிக்கப்பட்டனர் என மொண்ட்ரீயல் பொலிஸார் தெரிவித்தனர்.

காணாமல் போன நான்காவது நபர் கடைசியாக மொண்ட்ரீயல் காவல்துறையின் அதிகார வரம்புப் பிரதேசத்திற்கு வெளியே காணப்பட்டமையால் வழக்கு விசாரணை கியூபெக் மாகாணப் பொலிஸுக்கு மாற்றப்பட்டது என்று மாகாணப் பொலிஸின் செய்தித் தொடர்பாளர் பிரட்ரிக் டெஹாய்ஸ் நேற்று ஞாயிற்றுக் கிழமை தெரிவித்தார்.

விசாரணை நடைபெற்று வரும் நிலையில் மேலும் எந்த தகவலையும் வெளியிட முடியாது என்று டெஹாய்ஸ் கூறினார்.

செயின்ட்ஹூபர்ட் தெருவுக்கு அருகிலுள்ள டி லா கம்யூன் தெருவில் உள்ள அடுக்குமாடி கட்டடத்தில் இருந்து மோதல் குறித்து வெள்ளிக் கிழமை அதிகாலை 4 மணியளவில் 911 என்ற எண்ணுக்கு அழைப்பு வந்ததாக மொண்ட்ரீயல் பொலிஸார் தெரிவித்தனர். அதன் பின்னரே நால்வர் கடத்தப்பட்டமை பற்றிய தகவல் தெரிய வந்தது எனக் கூறப்பட்டது.

பல மணிநேரங்களுக்குப் பிறகு லாவலின் புறநகர்ப் பகுதியில் எரிக்கப்பட்ட நிலையில் கண்டுபிடிக்கப்பட்ட வாகனம் இந்தக் கடத்தலுடன் தொடர்புடையதாக இருக்கலாம் என்று ஒரு வட்டாரம் தகவல் வெளியிட்டது.

ஆள் கடத்தல் நடந்த இடத்துக்குப் பக்கத்தில் தற்காலிக பொலிஸ் மொபைல் நிலையம் ஒன்று திறக்கப் பட்டுள்ளது.

# ஹாலிபெக்ஸ் தேவாலயத்தை உடனடியாக மூடுமாறு உத்தரவு

கனடாவின் ஹாலிபெக்ஸ் பகுதியில் அமைந்துள்ள பழமையான கத்தோலிக்க தேவாலயம் ஒன்றை உடனடியாக மூடுமாறு உத்தரவிடப்பட்டுள்ளது.

பாதுகாப்பு காரணிகளுக்காக இவ்வாறு தேவாலயத்தை மூடுமாறு அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது.

ஹாலிபெக்ஸின் பிரவுன் ஸ்பீக் வீதியில் புனித பத்திரிசியார் தேவாலய கட்டடம் அமைந்துள்ளது.

இந்த தேவாலயத்தில் காணப்படும் கோபுரம் இடிந்து விழக்கூடிய அபாயத்தை எதிர் நோக்கி உள்ளது.

இதன் காரணமாக இந்தத் தேவாலயத்தில் பூஜை வழிபாடுகளை நடத்துவது ரத்து செய்யப்பட்டுள்ளது.



## காட்டுத்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பாதுகாப்பு சிறை, அருகிலுள்ள காட்டுத் தீயின் தீவிரம் காரணமாக அங்கிருந்து இடம்மாற்றப்பட்டதாக கனடாவின் சீர்திருத்த சேவைமைப்பு உறுதிப்படுத்தியுள்ளது.

போர்ட்-கார்டியர் நிறுவனத்தில் உள்ள கைதிகள் கடந்த வெள்ளிக்கிழமை மற்ற பாதுகாப்பான கூட்டாட்சி சீர்திருத்த இடங்களுக்கு 'வெற்றிகரமாக மாற்றப்பட்டனர் என்று ஞாயிற்றுக் கிழமை வெளியிடப்பட்ட ஒரு வெளியீடு தெரிவித்தது.

போர்ட்-கார்டியர் சிறைக் கட்டமைப்பு தற்போது பார்வையாளர்கள், பணியாளர்கள், ஒப்பந்ததாரர்கள் மற்றும் தன்னார்வலர்கள் அனைவருக்கும் மூடப்பட்டுள்ளது.

## பிரதமர் ஜஸ்டின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கின்றது.

அத்தொகுதியை கடந்த முப்பது ஆண்டுகளுக்கு மேல் ஒன்பது தேர்தல்களில் தொடர்ச் சியாக வென்று பிரதிநிதித்துவம் செய்து வந்த கரோலின் பென்னட் அம்மையார் இராஜினா

மாச் செய்தமையால் இப்போது இடைத் தேர்தல் நடைபெறுகின்றது.

இன்றைய இடைத்தேர்தலிலும் ஆளும் லிபரல் கட்சி வெற்றி பெறும் என அக்கட்சி வட்டாரங்க நம்பிக்கை வெளியிட்டுள்ளன.

எவ்வாறெனினும், Ipsos நிறுவனம் நடத்திய கருத்துக்கணிப்பில் எதிரணியான கன்சர்வேட்டிவ் கட்சி 42 வீதமான வாக்குகளைப் பெற்றுக் கொள்ளும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, கனடிய பிரதமரும் லிபரல் கட்சியின் தலைவருமான ஜஸ்டின் ட்ரூடோ மீதான மக்களின் ஆதரவு பலவீனமடைந்து வருவதாகவும் இது லிபரல் கட்சியின் ஆதரவினை பெருமளவு பாதிக்கும் எனவும் வேறு கருத்து கணிப்புகள் மூலம் தெரிய வந்துள்ளது.

# டாக்ஸி சாரதிகளுக்கு 143 மில்லியன் டொலர் நஷ்டஈடு வழங்க கியூபெக் அரசுக்கு உத்தரவு!

## கனடிய உச்சநீதிமன்றம் வழங்கியுள்ள அதிரடி உத்தரவு

டாக்ஸி சாரதிகளுக்கு 143 மில்லியன் டொலர் நஷ்டஈடு வழங்குமாறு கனடாவின் கியூபெக் மாகாண அரசாங்கத்திற்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

கனடிய உச்சநீதிமன்றம் இவ்வாறு நஷ்டஈடு வழங்கப்பட வேண்டும் எனத் தீர்ப்பு அளித்துள்ளது.

கியூபெக் மாகாண அரசாங்கம், டாக்ஸி சாரதிகளின் அனுமதிகளை ஐந்து ஆண்டுகளுக்கு முன்னர் ரத்து செய்திருந்தது.

இந்த தீர்மானத்திற்கு எதிராக டாக்ஸி சாரதிகள் நீதிமன்றில் வழக்கு தொடர்ந்திருந்தனர்.

முன்னணி டாக்ஸி சேவை நிறுவனங்களில் ஒன்றான ஊபர் நிறுவனத்திற்கு சந்தையில் பிரவேசிக்க சந்தர்ப்பம் வழங்கும் நோக்கில் ஏற்கனவே தொழில் செய்து கொண்டிருந்த டாக்ஸி சாரதிகளின் உரிமம் சட்டவிரோதமான முறையில் ரத்து செய்யப்பட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

நியாயமான நஷ்டஈட்டுத்தொகை வழங்காது அரசாங்கம் சாரதிகளுக்கு அநீதி இழைத்துள்ளதாக நீதிபதி சில்வானா காண்டே தெரிவித்துள்ளார்.

இதன் அடிப்படையில் டாக்ஸி சாரதிகளுக்கு 143 மில்லியன் டொலர் நட்ட ஈடு வழங்கப்பட வேண்டும் எனவும் வட்டி தொகையை சேர்த்தால்




இந்த தொகையானது 219 மில்லியங்களாக அதிகரிக்கும் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

நீதிமன்றத்தின் இந்த தீர்ப்பு வரலாற்று ரீதியான வெற்றி என சாரதிகளை பிரதிநிதித்துவம் செய்யும் சட்டத்தரணி புரூஸ் ஜான்சன் தெரிவித்துள்ளார்.

ஊபர் போக்குவரத்து சேவையை ஆரம்பித்தபோது டாக்ஸி சாரதிகளுக்கு சந்தை பெறுமதியை விடவும் குறைந்த அளவிலான நட்டஈடு வழங்கப்பட்டதாக சுட்டிக்காட்டப்பட்டிருந்தது.

வழக்கு விசாரணைகளின் பின்னர் நீதிமன்றம் கியூபெக் மாகாண அரசாங்கத்திற்கு நஷ்டஈடு வழங்குமாறு உத்தரவிட்டுள்ளது.

நீதிமன்றின் இந்த தீர்ப்பின் பிரகாரம் சாரதி ஒருவர் சராசரியாக 50 ஆயிரம் முதல் 60 ஆயிரம் டொலர்கள் வரையில் நஷ்டஈட்டுத் தொகையைப் பெற்றுக் கொள்ள முடியும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை, இந்த தீர்ப்புத் குறித்து 30 நாத்களுக்குள் மேன் முறையீடு செய்ய முடியும் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

# டொரன்டோப் பிரதேசத்தில் வேலை வாய்ப்பு குறைகிறது

## வேலை தேடுவோருக்குப் பெரும் நெருக்கடி

கனடாவின் டொரன்டோ பகுதியில் வேலை வாய்ப்பு பெற்றுக் கொள்வதற்கு காத்திருப்போருக்கு ஓர் அதிர்ச்சி செய்தி வெளியிடப்பட்டுள்ளது.

வேலை வாய்ப்பு எண்ணிக்கை குறைவடைந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

புதிய வாழ்க்கையை, புதிய சந்தர்ப்பங்களை, தொழில்சார் வெற்றிகளை ஈட்டிக் கொள்ளும் நோக்கில் கனடாவிற்கு வருகை தரும் பலரும் நெருக்கடிகளை எதிர் நோக்க நேரிட்டுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

வெளியிடங்களில் இருந்து தொழில் வாய்ப்புகளை பெற்றுக் கொள்வதற்காக காத்திருக்கும் அல்லது விண்ணப்பம் செய்யும் பலரது விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படுகின்றன எனத் தெரிவிக்கப்படுகிறது.

இர்களின் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படுவதற்கு பிரதான ஏதுவாக கனடிய தகுதிகள் அல்லது கனடிய தொழில் அனுபவங்கள் இல்லை என்ற விடயம் காணப்படுவதாகச் என சுட்டிக்காட்டப்படுகின்றது.

பலர் கனடாவில் தொழில் வாய்ப்பு



பெற்றுக் கொள்வதற்காக முயற்சி எடுத்து வருகின்றனர்.

எனினும் வேலையில்லா பிரச்சனை அதிகரித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

டொரன்டோவில் மட்டும் ஆயிரக்கணக்கானவர்கள் வேலை வாய்ப்பின்றி பாதிக்கப்பட்டுள்ளனர்.

கனடிய புள்ளி விவரவியல் திணைக்களம் இது குறித்த தகவல்களை வெளியிட்டுள்ளது.

கடந்த மே மாதம் டொரன்டோவில் வேலை வாய்ப்பு அற்றவர்களின் எண்ணிக்கை 3,17,200 ஆக அதிகரித்துள்ளது.

ஏப்ரல் மாதத்துடன் ஒப்பீடு செய்யும் இந்த எண்ணிக்கை 1.79 வீத அதிகரிப்பு பதிவாகியுள்ளது.




# வேலைவாய்ப்புக்காகக் கனடாவில் காத்துத் தவமிருக்கும் மாணவர்கள்

கனடாவில், வேலைவாய்ப்புக்காக நூற்றுக்கணக்கான மாணவர்கள் வரிசையில் நிற்கும் காணொலியொன்று வெளியாகி பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

அமெரிக்கா, லண்டன், கனடா உள்ளிட்ட நாடுகளுக்கு பலரும் வேலைவாய்ப்புடன் படிக்க செல்கிறார்கள். படிப்பிற்காகப் பெரும் செலவு செய்யப்படுவதால் படிப்பு நேரம் போக மீதி நேரத்தில் வாழ்வாதாரத்துக்காக வேலை பார்த்து வருகின்றனர்.

இந்நிலையில், இது தொடர்பான காணொலியொன்று சமூக வலைத்தளங்களில் வெளியாகி அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

இந்தக் காணொலியில், கனடாவில் பிரபல உணவகமான டிம் ஹார்டனில் வேலைவாய்ப்புக்காக நூற்றுக்கணக்கான மாணவர்கள் வரிசையில் காத்து நிற்கின்றனர்.

இந்த உணவகத்திற்கு வேலைவாய்ப்புக்காக சென்ற நபரொருவர் அங்கு சென்ற போது நூற்றுக்கணக்கானவர்கள் நிற்பதை கண்டு அதிர்ச்சியடைந்துள்ளார்.

உள்ளூர் மக்களும் இங்கே என்ன நடக்கிறது என்று ஆச்சர்யமாக பார்க்கின்றனர்.

பல மணி நேரம் வரிசையில் நிற்பவர்களிடம் உணவக ஊழியர்கள், அவர்களது விண்ணப்பங்களை வாங்கிக்கொண்டு பிறகு அழைப்பதாக கூறி அனுப்பி விடுகின்றனர்.

இந்த காணொலியைப் பதிவிட்ட நபர், பல இடங்களில் வேலைவாய்ப்புக்காகத் தாம் சென்றார் எனவும், எங்கு வேலை கிடைக்கும் என்று தெரியவில்லை, இது எனது போராட்டம் நிறைந்த நாள் என்றும் குறிப்பிட்டுள்ளார்.





# கல்கரியில் நீர் விநியோகம் தொடர்ந்தும் நெருக்கடியில்

கனடாவின் அல்பேர்ட்டா மாகாணத்தின் கல்கரியில் நீர் பயன்பாட்டில் பாரியளவு விழ்ச்சி பதிவாகியுள்ளது.

நீர் விநியோகக் கட்டமைப்பில் ஏற்பட்ட கோளாறு காரணமாக இவ்வாறு நீர் விநியோகம் வரையறுக்கப்பட்டுள்ளது.

நீர்த்தட்டுப்பாட்டு நிலை காரணமாக கல்கரியில் அவசரநிலைமை அறிவிக்கப்பட்டிருப்பது தெரிந்ததே.

நேற்று முன்தினம் நகரில் 451 மில்லியன் லீற்றர் நீர் பயன்படுத்தப்பட்டுள்ளது.

நீர் பயன்பாட்டில் குறிப்பிடத்தக்களவு வீழ்ச்சி பதிவாகியுள்ளதாக நகர முதல்வர் ஜொயொட்டி கொன்டெக் தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் நாள்களில் வெப்பநிலை அதிகரிக்கும் என எதிர்வுகூறப்பட்டுள்ளது.

நகரின் இரண்டு இடங்களில் சுத்திகரிக்கப்படாத நதி நீர் விநியோகம் செய்யப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.




# பாம்பார்டியர் விமான கட்டுமான நிறுவன ஊழியர்கள் வேலை நிறுத்தத்தில் குதிப்பு

மிசிசாகாவில் உள்ள டொராண்டோ பியர்சன் சர்வதேச விமான நிலையத்தில் அமைந்துள்ள பாம்பார்டியர் (Bombardier) விமான கட்டுமான நிறுவனத்தின் 1,350 ஊழியர்கள் நேற்று ஞாயிற்றுக்கிழமை முதல் வேலை நிறுத்தத்தில் குதித்துள்ளனர்.

வேலைநிறுத்தக் காலக்கெடு இரவு 11:59 மணியுடன் முடிவடைந்ததை அடுத்து அவர்கள் வேலை நிறுத்தத்தில் குதித்தனர் என சம்பந்தப்பட்ட தொழிற்சங்கத் தரப்பில் கூறப்பட்டது.

நிறுவனத்துடனான பேச்சுவார்த்தைகள் இரவு தாண்டி காலை வரை தொடர்ந்ததாக தொழிற்சங்கம் கூறுகிறது. பேச்சுக்கள் இன்று திங்கள்கிழமை மீண்டும் தொடங்கும் என்றும் குறிப்பிடப்படுகிறது.

"தொழிற்சங்கத்தின் பேரம் பேசும் குழு உறுப்பினர்கள் ஒரு உடன்படிக்கையை நோக்கிச் செயல்படுகின்றனர், மேலும் இரு தரப்பினரும் பேரம் பேசும் செயல்முறையைத் தொடர உறுதியுடன் உள்ளனர்" என்று தொழிற்சங்கத் தரப்பு கூறுகிறது.

பாம்பார்டியர் நிறுவனத்தின் செய்தித் தொடர்பாளர் மார்க் மஸ்லெஜ் "பரஸ்பர நன்மை பயக்கும் உடன்படிக்கையை விரைவாக எட்டுவதே கூட்டு இலக்கு" என்றார்.



CLICK HERE VIDEO

# மனித மல நுண்ணுயிரிகளை விற்கும் அமெரிக்க நிறுவனம்

## கனடாவிலும் அதற்கு வாடிக்கையாளர்கள்

மனித மலம் கொண்ட பொருள்களை கனடிய மக்களுக்கும் விற்கும் ஓர் அமெரிக்க நிறுவனம் குறித்து சர்ச்சை கிளம்பியிருக்கின்றது.

அமெரிக்காவின் உணவு மற்றும் மருந்து நிர்வாகம் தனது ஏஜென்சியின் அனுமதியின்றி மனித மலம் கொண்ட பொருள்களை விற்பனை செய்வதாகத் தோன்றும் ஒரு நிறுவனத்திற்கு எச்சரிக்கைக் கடிதம் அனுப்பியுள்ளது.

கனடாப் பாவனையாளர்களுக்கும் இது விற்கப்படுகின்றமையால் 'ஹெல்த் கனடா' அமைப்பும் இதைப் பற்றி சிரத்தை எடுத்துள்ளது.

மலம் நுண்ணுயிர் மாற்று அறுவை சிகிச்சையில் (FMT) ஈடுபடும் ஹியூமன் மைக்ரோப்ஸ் (Human Microbes) என்ற நிறுவனம் 'உலகின் மிகப்பெரிய, மிக உயர் தர மல தானம் செய்யும் வங்கி' என்று தன்னை விளம்பரப்படுத்தி வருகையில், அதன் இணையதளத்தை ஒரு மாதத்திற்கு முன்பு மதிப்பாய்வு செய்த பிறகு அமெரிக்காவின் உணவு மற்றும் மருந்து நிர்வாகம் கடந்த மார்ச் மாதம் இந்த எச்சரிக்கைக் கடிதத்தை அனுப்பியுள்ளது.

'ஹெல்த் கனடா'வின் கூற்றுப்படி, 'மலம் நுண்ணுயிர் மாற்று அறுவை சிகிச்சை'(FMT) என்பது மிக ஆரோக்கியமான ஒருவரின் பெருங்குடலில் இருந்து ஒரு சிறிய மாதிரியான மலத்தை நோயாளியின் பெருங்குடலுக்கு மாற்றுவதற்கான ஒரு மருத்துவ முறையாகும். ஒவ்வொரு ஆரோக்கியமான மல மாதிரியிலும் ஆயிரக்கணக்கான நன்மை பயக்கும் மைக்ரோபயோட்டாக்கள் உள்ளன. அவை நோயுற்ற பெருங்குடலின் ஆரோக்கியத்தை பல்வேறு வழிகளில் மேம்படுத்தலாம்.

ஆரோக்கியமான ஒருவரின் மலத்திலிருந்து நோயாளியின் குடலுக்கு பாக்டீரியாவை மாற்றுவது, ஆரோக்கியமான நுண்ணுயிரியை மீண்டும் நிறுவுவதாகும். இது எனிமா, கொலோனோஸ்கோபி அல்லது பிற வழிகளில் மேற்கொள்ளப்படுகிறது.

'எனிமா' என்பது நோயாளியின் மலக்குடலில் நேரடியாக திரவத்தை செருகுவதை உள்ளடக்கியது. பெரும்பாலான மக்கள் மற்ற சிகிச்சைகள் மூலம் முன்னேற்றமடையாத மலச் சிக்கலைப் போக்கவும், பெருங்குடலைச் சுத்தப்படுத்தவும், கொலோனோஸ்கோபிக்குத் தயாராவதற்கும் இந்த முறைமையைப் பயன்படுத்துகின்றனர்.

'கொலோனோஸ்கோபி' என்பது முழு பெருங்குடலின் உட்புறத்தையும் சரிபார்க்க சுகாதார வழங்குநரை அனுமதிக்கும் ஒரு செயல்முறையாகும். கொலோனோஸ்கோப் எனப்படும் நீண்ட, நெகிழ்வான குழாயைப் பயன்படுத்தி செயல்முறை செய்யப்படுகிறது. குழாயில் ஒரு ஒளி மற்றும் ஒரு முனையில் ஒரு சிறிய கமரா இருக்கும்.

ஹெல்த் கனடாவின் செய்தித் தொடர்பாளர் இந்த வகையான சிகிச்சை, அங்கீகரிக்கப்பட்ட மருத்துவ பரிசோதனையின் பின்னணியில் மட்டுமே பயன்படுத்தப்பட வேண்டும் என்பதை உறுதிப்படுத்துகின்றார்.

மலம் நுண்ணுயிர் மாற்று அறுவை சிகிச்சையின் மூலம் எரிச்சல் கொண்ட குடல் நோய்க்குறி, பார்கின்சன் நோய், மல்டிபிள் ஸ்களீரோசிஸ் (மூளை மற்றும் முதுகுத் தண்டுவடத்தை பாதிக்கக்கூடிய ஒரு நிலை.இது பார்வை, கை அல்லது கால் இயக்கம், உணர்வு அல்லது சமநிலை போன்ற பிரச்சினைகள் உட்பட பலவிதமான சாத்தியமான அறிகுறிகளை ஏற்படுத்துகிறது) மற்றும் மனச்சோர்வு, பதற்றம் போன்ற மனநலக் கோளாறுகள் மற்றும் பிற நிலைமைகளுக்கு சிகிச்சையளிப்பதற்கு 'மருத்துவ பரிசோதனைகளில் நம்பிக்கைக்குரிய முடிவுகளை' அளிக்கிறது என மேற்படி ஹியூமன் மைக்ரோப்ஸ் நிறுவனத்தின் இணையத் தளம் தெரிவிக்கின்றது.

இந்த நிறுவனம் அமெரிக்கா, கனடா மற்றும் உலகின் பிற பகுதிகளில் உள்ளவர்களுக்கு காப்ஸ்யூல்கள் மற்றும் எனிமா மூலம் மாற்று சிகிச்சைக்காக மல நுண்ணுயிரிகளை விற்பதாகத் தெரிகிறது.

மேலும் அந்நிறுவனம் உயர்தர மலம் நன்கொடையாளர்களைத் தேடி, அவற்றைப் பெறுவதற்கு ஒரு 'நன்கொடைக்கு' ஐந்நூறு டொலர்கள் வரை வழங்குகின்றதாம்.

இந்த உயிரியல் தயாரிப்புகளை 'சட்டப்பூர்வமாக சந்தைப்படுத்த', சரியான உயிரியல் உரிம விண்ணப்பம் தேவை என்று அமெரிக்காவின் உணவு மற்றும் மருந்து நிர்வாகம் தனது எச்சரிக்கைக் கடிதத்தில் சுட்டிக் காட்டியுள்ளது.

இந்தத் தயாரிப்புகள் புதியதாகக் கருதப்படுவதால், அவற்றை அறிமுகப்படுத்தவும் வழங்கவும் அமெரிக்காவின் உணவு மற்றும் மருந்து நிர்வாகத்தின் அங்கீகரிக்கப்பட்ட பயன்பாடு நடைமுறையில் இருக்க வேண்டும் என்றும், கூடுதலாக, வளர்ச்சி நிலையில் - மருத்துவ பரிசோதனைகளில் - இம்முறைமை இருக்கும் போது மக்களுக்கு விநியோகிக்கப்படும் இத்தயாரிப்புகள் குறித்து ஒரு விசாரணைப் பொறிமுறைக்கு உட்படுவது அவசியம் என்றும் அது வலியுறுத்தியுள்ளது.